மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

இல்லம் : 5 சுற்றம் : 3 மார்ச்சு 2017 விலை : ரூ.10/- ஆசிரியர் : விசவனூர் வே. தளபதி



மார்ச்சு 8 மகளிர் நாள்

## சூகி

பெண்களின் தன்னம்பிக்கை வடிவம்


தமிழர் கலைபண்பாட்டுக் கழகம் டென்மார்க்
நடாத்தும்
தேசத்தின் குயில்கள்
தியாக தீபம் லெப்.கேணல் திலீபன் அவர்களின் நினைவாக நடாத்தப்படும்
தமிழீழ எழுச்சிப் பாடல் போட்டி
விண்னப்ப முடிவுத் திகதி
29.04.2017
Sep 09
Saturday
தொடர்புகளுக்கு : 29 26 86 40
Email : deesathinkujel@gmail.com

மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

Mutram monthly March 2017

ஆசிரியர்
**விசவனூர் வே.தளபதி.**
இணை ஆசிரியர்கள்
பேராசிரியர் **அப்பாத்துரை**
**அ.வெற்றிவேந்தன்** எம்.ஏ., பி.எல்.,
துணை ஆசிரியர்
**இமயவரம்பன்** பி.எஸ்சி.,எம் .ஏ.,பி.எல்.,
உதவி ஆசிரியர்கள்
**அ. உமாமகேசுவரி** எம் .ஏ.,
**ஜெ. ராஜா சிங்,**
**ஜெய்**
தலைமைச் செய்தியாளர்கள்
**வே. வளையாபதி**
**த. ஞானமணி** பி.எஸ்.சி., பி. எட்.,
செய்தியாளர்கள்
**பொன்முடி** சிவகங்கை
A.**அமல்ராஜ்**
**க. பவானி** பி.ஏ.,
**நாராயணன்**
**சிவக்குமார்** மதுரை
**ரஞ்சித் இமானுவேல்**
**ஜான்டேவிட்**
**பெ. அர்ஜுன்**
**சாதிக்பாட்சா** கோவை
**மு.கலைச்செல்வன்**
**வே. பால்ராஜ்** மதுரை
**ஞா. ஜான்சன் டேவிட்** மதுரை
**டி. வி. ரமணி**
**குமார் செங்கல்பட்டு**
**ராஜா சாக்ரடீஸ்** தஞ்சை
**த. சுஜாதா** பி.காம்., எம்.பி.ஏ.,
V.**கணேஷ்** திருவல்லிக்கேணி
வடிவமைப்பு
**எழில் வரைகலை**
புகைப்படக்காரர்
**இரமேஷ்**

அலுவலக முகவரி
எண் 124, என்.டி.ஆர். தெரு, ரங்கராஜபுரம்,
கோடம்பாக்கம், சென்னை- 600 024
பேச: 8056281973, 044 42154408.
மின்னஞ்சல்:
mutram2010@gmail.com
இணைய தளம் :
www.mutram.in

MUTRAM
Indian Bank Account No,CA 920493454.
Rangarajapuram branch.
Kodambakkam, chennai

## உள்ளே

சீமைக் கருவேலம் (தலையங்கம்)........4

சூகி – பெண்களின் தன்னம்பிக்கை வடிவம்........ 5

தமிழர்களின் அளவீடு முறைகள்........ 8

ஜல்லிக்கட்டு........ 9

சென்னை நகரக் காகம் (கவிதை)........ 11

செவ்வியல் நாட்டிய நிகழ்ச்சிகளில் புதிய அணுகுமுறைகள்
தே. குமரன்........ 12

வேலை (சிறுகதை)........ 14

ஈழம் வேண்டுமடி கிளியே (கவிதை)
தரா.கார்த்திகை........ 15

தமிழகத்தில் ஒவ்வொரு ஊருக்கும்
ஒரு சிறப்பு உண்டு........ 17

ஆதிச்சநல்லூர்: தமிழர் நாகரிகத்தின் அடையாளம்........ 18

அவள் வந்து விடுவாள் (சிறுகதை)
தரா.கார்த்திகை........ 23

தமிழரின் வானியல்
தமிழறிஞர் மா.சோ.விக்டர்........ 24

சத்துமாவு (உணவு செய்முறை) ........26

தெரிந்துகொள்வோம்: ஹைட்ரோ கார்பன்
கவிபாஸ்கர்........ 28

இலங்கை தொடர்பான
ஐ.நா.மனித உரிமை ஆணையரின் அறிக்கை........ 31

தாமிரபரணி ஆற்று நீரை உறிஞ்சும்
பெப்சி, கோககோலா நிறுவனங்களை தடைசெய்வோம்........ 33

காசோலை, வரைவோலை
அனுப்புவோர் "mutram" என்ற பெயருக்கு
எடுத்தனுப்பலாம்.





# சீமைக் கருவேலமரம்?

தமிழகத்தில் ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது. ஆனால், அது யாருடைய ஆட்சி என்பதில்தான் பல்வேறு ஐயங்கள் எழுகின்றன. அரசியலை ஆழமாக உணர முற்படாத மக்கள் நினைக்கிறார்கள் இது சசிகலாவின் ஆட்சி என்று. சசிகலா அவர்கள் சிறைக்குச் சென்றதால், அவரது அறிவுரைப்படி எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் ஆள்கிறார் என்பது தான் அவர்கள் எண்ணமாக இருக்கிறது. விவசாயிகள் பிரச்சினை, மருத்துவத் தேர்வு, மீனவர்களை சிங்களக் காடைகள் சிறைபிடிப்பது, சுட்டு வீழ்த்துவது, இரட்டை இலைச் சின்னம் பறிபோய் இருப்பது, அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் என்ற பெயரை பயன்படுத்தக்கூடாது என்று தேர்தல் ஆணையம் உத்தரவிடுவது என்பது எல்லாம் நடக்கிறதே இதற்கு யார் காரணம்.

அஇஅதிமுக விற்கு எதிரான பல செயல்பாடுகள், தமிழக கட்சிகளால் அல்ல பா ச க அரசால் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. ஜெயலலிதா இருக்கும் வரை அமைதியாக இருந்த பா ச க, இன்று அதிமுக விற்கு எதிராக பல செயல்பாடுகளில் இறங்கி வேலை செய்து கொண்டிருக்கிறது. பன்னீர்செல்வத்தின் திடீர் சமாதிப் புரட்சியில் தொடங்கி, கங்கை அமரன் தேர்தலில் போட்டியிடுகிற செயல் வரை பல்வேறு அதிமுக எதிர்ச் செயல்களில் பா ச க தீவிரம் காட்டி வருகிறது.

தமிழகத்தில் தன்னை நிலைநிறுத்த வேண்டும் என்பதற்காக, பிற்படுத்தப்பட்டவர்கள், மிக பிற்படுத்தப் பட்டவர்கள், தலீத் மக்கள் என எல்லாப் பிரிவினரிடமும் மத வேறுபாடுகளைச் சொல்லி பிரிவினை விளையாட்டு விளையாடி வருகிறது. அவர்களிடம் கருத்து முரண்பாடுகளை ஏற்படுத்தி, அண்ணன் தம்பிகளுக்குள் சண்டையை ஏற்படுத்தி, தனது கட்சியை பலப்படுத்த முனைப்புக் காட்டுகிறது. தமிழ்நாடு என்ற அமைதிப் பூங்காவில் சீமைக் கருவேலமரம் முளைத்து பரவ எத்தனிக்கிறது. தமிழகக் கட்சிகள் என்ன செய்யப் போகின்றன?





# சூகி
## பெண்களின் தன்னம்பிக்கை வடிவம்

பெண்கள் மென்மையானவர்களாகத் தோன்றலாம். ஆனால் மனதளவில் வலிமையுடைய வர்கள். எத்தனை தடைகள் வந்தாலும் மன தைரியத்துடன் போராடி நினைப்பதை சாதிக்கும் ஆற்றல் பெண்களிடம் உண்டு. அப்படிப்பட்ட ஆற்றல் நிறைந்த பெண்களில் உலகமே பார்த்து அதிசயித்த பெண்மணி, ஆங்சான் சூகி. மியான்மரில் மக்களுக்கு எதிராக அடக்குமுறையைக் கையாண்டு வந்த ராணுவ சர்வாதிகார ஆட்சிக்கு எதிராகக் குரல் கொடுத்து உலகின் கவனத்தை ஈர்த்தவர்.

இவருடைய தந்தை ஜெனரல் ஆங் சான், சுயாட்சி விடுதலைப்படையின் கமாண்டராக செயல்பட்டவர். மியான்மருக்கு சுதந்திரம் பெற்றுத் தந்ததில் இவருக்கு முக்கியப் பங்கு உண்டு. அதனால், அங்குள்ள மக்கள் அவரை தேசத்தந்தையாகப் போற்றினார்கள். சூகியின் தாயார் ரங்கூனில் உள்ள பொது மருத்துவமனையில் நர்சாக பணிபுரிந்தவர். 1947ல் சூகி இரண்டு வயது குழந்தையாக இருந்தபோது, அரசியல் சூழ்ச்சியால் அவருடைய தந்தை கொலை செய்யப்பட்டார்.

1960ஆம் ஆண்டு சூகி டெல்லி வந்து கல்வி கற்றார். பி.ஏ., பட்டம் பெற்றார். பின்னர் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் தத்துவஇயல் படித்தார். அதன்பிறகு அரசியல் பாடத்திலும் தேர்ச்சி பெற்றார். 1972ஆம் ஆண்டு இங்கிலாந்தைச் சேர்ந்த மைக்கேல் எர்சி என்பவரை சூகி திருமணம் செய்து கொண்டார். குழந்தைகளும் பிறந்தன. 1988ஆம் ஆண்டு சூகியின் வாழ்க்கையில் மிகப்பெரிய திருப்பம் ஏற்பட்டது. உடல்நலக்குறை வால் அவதிப்பட்டு வந்த அவருடைய தாயாரின் உடல்நிலை மிகவும் மோசமானது. கணவரையும் குழந்தைகளையும் விட்டுப் பிரிந்து தாயாரை கவனித்துக் கொள்ள மியான்மர் புறப்பட்டுச் சென்றார்.



அப்போது அங்கு நிலவிய சர்வாதிகார ஆட்சி சூகியைச் சிந்திக்க வைத்தது. கொடுங்கோல் ஆட்சி நடந்தது. அதற்கு எதிராக ஆங்காங்கே போராட் டங்கள் வெடித்தன. அதனை ஒடுக்க அடக்கு முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. நான்கு பேர் ஒன்று கூடி நின்று பேசக்கூட தடை விதிக்கப் பட்டது. மீறி கூடினால் சந்தேகப்படுப வர்களை எந்தக் காரணமும் இல்லாமல் கைது செய்து சிறையில் வைத்தார்கள். இதனால் அப்பாவி பொதுமக்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டனர்.

மக்களுக்கு எதிரான இந்த அடக்குமுறையைக் கண்டு சூகி ஆவேசம் அடைந்தார் சர்வாதிகாரத் துக்கு எதிராக போராட்டம் நடத்தினார். இராணுவம் அவருக்கு பல வழிகளில் தொந்தரவு கொடுத்தது. ஆனால் அவர் மனம் தளரவில்லை.

ஒருமுறை போராட்டம் நடத்தியபோது அவரை ராணுவம் தடுத்து நிறுத்தியது. அப்போது அவருடைய கழுத்துக்கு நேராக துப்பாக்கியை அழுத்திப் பிடித்து, போராட்டத்தை நிறுத்தும்படி மிரட்டி யது. அதைப் பார்த்து போராட் டத்தில் கலந்து கொண்டவர்கள் அதிர்ச்சியடைந் தனர். ஆனால் சூகியோ சற்றும் பயப் படாமல் என்னைச் சுடுங்கள். எவ்வ ளவோ வன்முறைகள் பார்த்து விட் டோம். இது என்ன புதிதா? சுடுங்கள். என் உயிரே போனாலும் போராட் டத்தில் இருந்து பின்வாங்க மாட்டேன். என் எண்ணம் நிச்சயம் நிறைவேறும். என்றவர் கூட்டத்தினைச் சுட்டிக்காட்டி எத்தனை ஆங் சான் சூகிகளை உருவாக்கி வைத்திருக்கிறேன் பாருங்கள். எத்தனை பேரை உங்களால் சுடமுடியும்? என்னைச் சுடுவதால் எதுவும் முடிந்து விடப் போவதில்லை. உயிருக்குப் பயந்தால் இப்படி பொது வாழ்க்கையில் ஈடுபட முடியாது. என்று நெஞ்சை நிமிர்த்தி கர்ஜித்தார்.

இந்தச்சம்பவம் நடந்து மூன்று மாதங்களுக்குப் பிறகு தன்னுடைய வீட்டில் மாணவர் படையைத் திரட்டி அவர்களுக்கு பயிற்சி அளித்துக் கொண்டிருந்தார். அப்போது திடீ ரென்று வீட்டுக்குள் நுழைந்த ராணுவம் மாணவர் களை சரமாரியாகக் தாக்கி சிறைபிடித்துச் சென்றது. இந்த கொடூரத் தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்து சூகி உண்ணாவிரதம் மேற்கொண்டார். அதில் அவரது இரண்டு மகன்களும், கணவரும் கலந்து கொண்டனர்.அதைப் பார்த்து மாணவர் களின் பெற்றோரும் உறவினர்களும் பொது மக்களும் பேராட்டத்தில் பங்கேற்றனர். போராட்டம் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து மாணவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

அதுன்பிறகு சூகியின் பேராட்டம் நாளுக்கு நாள் வேகம் பிடித்தது. புதிய அரசியல் கட்சியைத் தொடங்கி, அடக்குமுறைக்கு எதிராக குரல் கொடுத்தார். கொடுங்கோல் ஆட்சியால் பாதிக்கப் பட்ட மக்கள் ஒன்று திரண்டு அவருக்கு ஆதரவு தெரிவித்தனர். சர்வாதிகார அரசிடமிருந்து மக்களைக் காப்பாற்றுவதற்கு தேர்தலில் போட்டி யிடுவதுதான் ஒரே வழி என்ற முடிவுக்கு வந்தார் அதனால் ராணுவம் அவருக்கு எதிராக பிடியை இறுக்கியது. தீவிரவாதியைப் போல அவரைக் கண்காணித்தது. கடுமையான கட்டுப்பாடுகளையும் விதித்தது. வீட்டுக் காவலிலும் சிறை வைத்தது. இதனால் ஏற்பட்ட எதிர் விளைவுகள் சூகிக்குச் சாத கமாக மாறியது. தேர்தலில் அவருடைய கட்சி அதிக இடங்களைப் பிடித்து வெற்றி பெற்றது.



அப்போதும் இராணுவம் பிடிவாத மாக அவருக்கு பதவியை அளிக்க மறுத்தது. வீட்டுச் சிறையில் வைத்தது. அவரை சமூகக் குற்றவாளி என்றும் அறிவித்தது. இந்த அறிவிப்பை உலக நாடுகள் கண்டித்தன. விருதுகளும் வழங்கி கவுரவித்தன. அமைதிக்கான நோபல் பரிசும் அவருக்குக் கிடைத்தது.



ராணுவத்தின் சர்வாதிகாரம் சூகி யிடம் தோற்ற பின்பும், ராணுவம் தனது பிடியை விடவில்லை. அவரை எப்படி யாவது நாட்டை விட்டு விரட்டி விட வேண்டும் என்பதில் குறியாக இருந்தது. சூகி மியன்மரை விட்டு வெளியேறி விட்டால் விடுதலை செய்யப்படுவார். அவர் எந்த நாட்டுக்கு வேண்டு மானாலும் சென்று சுதந்திரமாக வாழலாம், என்று பேச்சுவார்த்தை நடத்திப் பார்த்தார்கள். அதற்கு சூகி ஒப்புக் கொள்ளவில்லை. என்னை நேசிக்கும் மக்கள் மத்தியில் நான் அடிமையாகவே இருந்துவிட்டுப் போகிறேன். என் மக்களை விட்டு வேறு எங்கும் போய் நான் நிம்மதியாக வாழ்ந்துவிட முடியாது. என் மனம் அவர்களுடைய நலனைத் தவிர வேறு எதைப் பற்றியும் சிந்திக்காது என்று திட்டவட்ட மாக கூறிவிட்டார்.

அவரை நாட்டை விட்டு விரட்டவும் முடியாமல், அவருக்குப் பெருகி வரும் ஆதரவைக் கட்டுப்படுத்தவும் முடியாமல் ராணுவ அதிகாரிகள் தவித்துப் போனார்கள். காரணமே இல்லாமல் அடிக்கடி கைது செய்து சிறையில் அடைத்தார்கள். நாட்டுக்கு எதிராக மக்களை தூண்டி விடுகிறார் என்று குற்றம் சாட்டினார்கள். சர்வாதிகார ஆட்சிக்கு முடிவு கட்டி மக்களாட்சி மலர அறவழியில் போராட்டம் நடத்திய சூகி சுமார் 15 ஆண்டுகள் வீட்டுக் காவலிலேயே சிறை வைக்கப்பட்டார். அதே நேரத்தில் அவருடைய கணவர், மகன்களை சந்திக்கக்கூட அனுமதி மறுக்கப்பட்டது.

புற்று நோயால் பாதிக்கப்பட் டிருந்த கணவர் இறக்கும் தருவாயில் மனைவியை ஒருமுறை பார்க்க வேண்டும் என்று அனுமதி கேட்டார். ஆனால், மறுத்து விட்டனர். சூகியும் கணவரை ஒருமுறை பார்க்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, நாட்டை விட்டு வெளியேறுவதாக இருந்தால் கணவரைச் சந்திக்க அனுமதிக்கிறோம் என்றார்கள். அதற்கு சூகி மறுத்துவிட்டார். என்னை நம்பி இருக்கும் மக்களை என் சுயநலத்திற் காக ஒருபோதும் விட்டுக் கொடுக்க மாட்டேன் என்றார். இறுதியில் சூகியைப் பார்க்க முடியாம லேயே அவருடைய கணவர் உயிர் பிரிந்தது.

பெரும் போராட்டத்திற்குப் பிறகு நாட்டு மக்களுக்கான உரிமைகளை மீட்டுத் தந்தார். ஜனநாயக முறையில் வெற்றி பெற்றார். ராணுவ ஆட்சி முடிவுக்கு வந்தது. அரசியல் வெளியுறவுத் துறை மந்திரியாக அங்கம் வகித்து, மியான்மரை வளர்ச்சிப் பாதையை நோக்கி வழி நடத்திச் செல் கிறார். அமெரிக்க அரசு அவருடைய மன உறுதி யைப் பாராட்டி அந்த நாட்டின் உயர்ந்த குடி மகன்களுக்கு வழங்கப்படும் நாடாளுமன்ற தங்கப் பதக்கத்தை வழங்கி கவுரவித்துள்ளது. உலகப் பெண்களின் தன்னம்பிக்கைக்கு சூகி சிறந்த உதாரணமாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறார். ●





# தமிழர்களின் அளவீடு முறைகள் பற்றி நாம் தெரிந்து கொள்வோம்.

1 ஒன்று

3/4 முக்கால்

1/2 அரை

1/4 கால்

1/5 நாலுமா

3/16 மூன்று வீசம்

3/20 மூன்றுமா

1/8 அரைக்கால்

1/10 இருமா

1/16 மாகாணி (வீசம்)

1/20 ஒருமா

3/64 முக்கால்வீசம்

3/80 முக்காணி

1/32 அரைவீசம்

1/40 அரைமா

1/64 கால்வீசம்

1/80 காணி

3/320 அரைக்காணி முந்திரி

1/160 அரைக்காணி

1/320 முந்திரி

1/102400 கீழ்முந்திரி

1/2150400 இம்மி

1/23654400 மும்மி

1/165580800 அணு

1/1490227200 குணம்

1/7451136000 பந்தம்

1/44706816000 பாகம்

1/312947712000 விந்தம்

1/5320111104000 நாகவிந்தம்

1/74481555456000 சிந்தை

1/48963110912000 கதிர்முனை

1/9585244364800000 குரல்வளைப்படி

1/57511466188800000 வெள்ளம்

1/575114661888000000 நுண்மணல்

1/2323824530227200000000 தேர்த்துகள்.

தமிழர்கள் இந்த அளவிற்கு அளவுகளை கண்டறிந்து பயன்படுத்தி வந்திருக்கிறார்கள் என்பது உலகத்தில் எவருக்கும் இல்லாத பெருமையாகும்.

# ஜல்லிக்கட்டு

இப்படி ஒரு எழுச்சியை இதுவரை தமிழகம் கண்டதில்லை. இனி வரும் காலங்களில் இந்தப் புரட்சி விதை வளர்ந்தே தீரும்.

மாணவர்களை, இளைஞர்களை இழிவாக மதிப்பிட்ட எல்லா அறிவு ஜீவிகளும் வாயடைத் துப்போன வேடிக்கை மனிதர்களாகிப் போனார்கள்.

வேறு ஒரு தேசத்தில் உள்ள ஒரு அமைப்பு, நம் தேசத்தின் அதிகார மையத்தை ஆட்டுவிக்குமானால், நாம் தேர்ந்தெடுத்த தலைவர்கள் நமக்கு எதற்கு என்றே நினைத்தார்கள் போராட்ட இளைஞர்கள்.

எனவே தான் எந்த அரசியல் சாயமும் படிய விடவில்லை. எந்த நட்சத்திரக் கூட்டத்தையும் அருகே சேர்க்கவில்லை. இது ஒவ்வொரு தனி தமிழனின் உணர்ச்சி என்பதை அரசு இயந்திரம் மெதுவாகத்தான் புரிந்து கொண்டது. ஏதேனும் ஒரு கட்சிக்குடைக்குக் கீழ் போயிருந்தால் என்றோ, அடித்து விரட்டப்பட்டிருப்பார்கள் இளைஞர்கள்.

கலாச்சாரத்திற்காகவும் பண்பாட்டிற்காகவும் சிறு துளியாய் சேர்ந்து, பெரு வெள்ளமாகி ஆழிப்பேரலை போல் மெரினா கடற்கரையையே மறைத்தது இளைய இளைஞர்கள் கூட்டம்.

பீட்டா என்றால் என்ன? பன்னாட்டு அரசியல் என்ன? என்ற தெளிவோடு போராடினார்கள். எப்படியாவது இந்தப் போராட்டத்தைப் பிசு பிசுக்கச் செய்ய வேண்டும் என்று பா.ஜ.க. எடுத்த முயற்சிகள் அவர்களையே பாதித்தது. அவர்களால் பதவி சுகத்தை அனுபவிப்பவர்கள், எழுதக்கூடாத வார்த்தைகளை இளைய சமுதாயத்திற்கு களங்கம் ஏற்படுத்தும் அளவிற்கு எழுதினார்கள். இலவசமாக உடலுறவு கடற்கரையில் கிடைக்கும் என்றால் கூட இளைஞர்கள் கூடுவார்கள் என்று பேசினார் ராதாராமன் என்ற பீட்டா அமைப்பைச் சார்ந்த பெண். நமது பண்பாடும் கலாச்சாரமும் தெரியாத பெண். போகட்டும் மன்னித்து விடுவோம்.

சு. சாமி, பொறுக்கிகள் என்கிறார். இந்தப் பேச்சுகளைக் கேட்கும் முன்பு வரை, போராட்ட இளைஞர்கள் முழக்கம் இட்டது பீட்டாவை தடை செய் என்று மட்டும்தான். ஆனால், பண்பாடும் கலாச்சாரமும் ஏதுமில்லாத ஒரு சிறு கூட்டம் அதிகார மையத்தின் ஆசியோடு பேசியதில்தான்





மாணவர்களின் போராட்டக் குரல் மத்திய அரசாங்கத்தை நோக்கித் திரும்பியது.

முக்கியமாக மோடி, விளம்பரப் பிரியரான நம் பிரதமரைத் தாக்கி ஒலித்த முழக்கங்கள் கொஞ்சம் அதிகமாகவே இருந்தது. மாலை நான்கரை மணிக்கு சட்டசபை கூடப்போகிறது, மசோதாவைத் தாக்கல் செய்யப் போகிறார் முதல்வர் பன்னீர்செல்வம். குடியரசுத் தலைவரின் ஒப்புதலும் பெற்றாகி விட்டது. அதற்கு முன் மூன்று மணிக்கே காவல்துறையை விட்டு தாக்கச் சொன்னது யார்?

போராட்டத்தைக் கலைக்கத்தான் வேண்டும் என்று அரசு முடிவு செய்திருந்தால், ஏழு நாட்களுக்கு முன்பே செய்திருக்கலாமோ, ஏன் செய்யவில்லை? ஏழு நாட்களாக நடந்த போராட்டம் எந்த குழப்பமுமின்றி, கலவரமுமின்றி, வெற்றியடைந்தால் உலக அரங்கில் அகிம்சையில் சிறந்தவர்கள் தமிழர்கள் என்ற பெயர் வந்துவிடும். அப்படி ஒரு நற்பெயர் வந்து விடக்கூடாது என்று தான் காக்கிச் சட்டைக்காரர்கள் கலவர காக்கி யாளர்கள் ஆனார்களோ! அந்த ஆதிக்க சமுகத் திற்கு எப்போதுமே தமிழர்கள் மீது காழ்ப்பு ணர்ச்சிதான். அதுதான் இலங்கையில் தமிழர் களைக் கொன்றொழித்தது. அதே காழ்ப்புணர்ச்சி தானே நமது கலாச்சாரத்தை கொண்டாடக் கூடாது என்கிறது.

வதை என்பதற்கும், அன்பு என்பதற்கும் வித்தியாசம் தெரியத அமைப்பிற்கு நமது வாழ்வியல் முறை தெரிய வாய்ப்பில்லை. அமெரிக்காவில் உள்ள பீட்டா அமைப்பு 2500 நாய்களை தங்கள் காப்பகத்தில் வைத்துப் பராமரிப்பதாகக்கூறி 1700 நாய்களைக் கொன்றது ஏன் தெரியுமா? புதிதாக நாய்களை விற்க வேண்டும். அமெரிக்காவில் வாழும் மக்கள் தங்கள் செல்லப்பிராணிகளுக்காக ஒரு ஆண்டுக்கு செலவிடும் தொகை இருபதாயிரம் கோடி டாலர். நமது நாட்டு மாடுகளுக்கு, இந்தியா வில் உள்ள விவசாயிகள் எல்லாம் சேர்ந்து, ஓராண்டுக்கு ஆண்டுக்கு செலவிடும் தொகை ஒரு லட்சம் கோடிக்கும் மேல். விடுவார்களா?

நம் மண்ணில் இருந்து உறிஞ்சப்படும் தண்ணீரை நமக்கே விற்கும் ஒரு கூட்டத்திற்கு ஆரிய அதிகார மையம் பட்டுக் கம்பளம் விரிக்கிறது. அதிலும் குறிப்பாக தமிழனை நசுக்க வேண்டு மெனில் இலங்கையும் சீனாவும் பாகிஸ்தானும் நண்பர்களாகி விடுகிறார்கள். இப்பொழுது அமெரிக்கா, ஆரிய அதிகார வர்க்கத்தினால், தமிழன் எதையெல்லாம் இழந்தான், எங்கிருந் தெல்லாம் விரட்டப்பட்டான், கொடும்பாவிகளை எரிப்பது போல் கொடும் பலிகள் எங்கெல்லாம் கொடுக்கப்பட்டான் என நமது நீண்ட நெடிய வரலாற்றை இனி வரும் இதழ்களில் பார்க்கப் போகிறோம்.

வாருங்கள் நம் பண்பாட்டின் வீரியம் என்ன என்று, முற்றத்தின் மூலம் எடுத்துரைப்போம்.

என்னை எந்த மண்ணில் வேண்டுமானலும் புதையுங்கள். என் பண்பாட்டை எந்த மண்ணுக் குள்ளும் புதைக்க விடமாட்டேன்.

**பிருந்தா.**

நாளும் நாங்கள் கரைந்துதான்
விடியும் காலைப் பொழுது
சென்னை மாந்தர்களுக்கு
இன்றோ
அதிர்ந்து எழுந்தோம் நாங்கள்
அப்படிச் சொல்வதைவிட
செத்து எழுந்தோம்
என்றுதான் சொல்லவேண்டும்.
எங்களில் ஒருசிலர்
எங்களது ஓமுெத்து மொழியான
கா என்பதைக்கூட மறந்து விட்டனர்

வெடி ஒலி கேட்டு
என் பிள்ளைகளை எண்ணி
இறக்கைகளை மூடியிருந்தேன்
எனது இறக்கைகளுக்குள்
என் பிள்ளைகளை
ஏன் அசைவற்றுக் கிடக்கிறார்கள்?
இறக்கை விலக்கிப் பார்த்தேன்
மனநலம் பாதிக்கப்பட்ட
மனிதக் குழந்தைகள் போல்
மலங்க மலங்க விழித்தனர்
மனித இனமே உனது நோயை
என் இனத்திற்கும்
கொடுத்து விட்டாயே என்று
மனதிற்குள்ளே அழுது
என் மக்கள் நோய் தீர்க்க
வழி தேடினேன். வழி கிடைத்தது.
சிட்டுக்குருவிகளைக் கொன்றழித்த
சிங்காரச் சென்னையை விட்டு
வெடி வெடிக்காத
சிற்றூர்கள் பக்கம் செல்ல
சிறகு விரித்தேன் என் மக்களோடு.

# சென்னை நகரக் காகம்






**அறிமுகம்:**

பாரத கலாச்சாரத்தின் சூடாமணியாக ஒளி வீசுவது நாட்டியக்கலை. இது காலத்தால் மூத்தும், இளமை குன்றாத சிறப்புத் தன்மையும் வாய்ந்தது. இந்தக் கலைகள் அனைத்தும் மக்களிடையே நெருங்கிய தொடர்பு கொண்டவை.

நடனக் கலைகள் பழங்காலத்தில் இருந்தே ஆடப்பட்டு வருகின்றன என்பதனை அறிந்து கொள்ள பல சான்றாதாரங்கள் உள்ளன. கோயில்களில் நடன சிற்பங்கள், சுவடுகள், கல்வெட்டுகள், சிலம்பு கூறும் வேத்தியல், பொதுவியல், சிலப்பதிகாரத்தில் மாதவி ஆடிய பதினொரு வகை ஆடல், கூத்தநூல், தொல் காப்பியம், பழந்தமிழர் இலக்கியம், சோழர் காலத்தில் தளச்சேரி பெண்டகள், நடன மங்கையர்கள் சதிர் (அ) தாசியாட்டம் மரபு ரீதியாக ஆடப்பட்டு வந்த நடனங்கள்.

தமிழ் செவ்வியல் நாட்டியத்தில் வரலாற்று போக்கு என்று சொல்லும் போது முதலாவது இயலில்,

செவ்வியல் நடனம் நாட்டுப்புற நடனம் எனற இரு பிரிவுகளின் கீழ் வகைப்படுத்தலாம். அந்த அந்த மாநிலத்தின் பண்கலை பண்பாடு பழக்க வழக்க நிலையை உட்படுத்தி உள்ளது.

# செவ்வியல் நாட்டிய நிகழ்ச்சிகளில் புதிய அணுகுமுறைகள்




செவ்வியல் நாட்டிய நிகழ்ச்சிகளில் பழைய மரபுகள் என்ற இரண்டாவது இயலில் சங்க காலத்தில் காணப் பெற்ற கூத்துக்கலை நன்கு வளர்க்கப் பெற்று இவர்களில் தனியாகவும் குழுவாகவும் இணைந்து பல்வேறு வேடம் பூண்டு இசைக்கருவிகளின் ஒலிக்கேற்பவம் பாடலைக் கேட்கவும் தங்களுடைய கூத்துக்கலையை ஊரின் நடுவிலும், பொது இடங்களிலும் தங்களுடைய திறனை வெளிப்படுத்தினார்.

செவ்வியல் நாட்டிய நிகழ்ச்சிகளில் புதிய அணுகுமுறைகள் என்ற மூன்றாவது இயலில் 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தாசியாட்டம் என்று வழங்கப்பட்டு இழிவு நிலைக்குத் தள்ளப்பட்ட பரத நாட்டியத்தை மீட்டுருவாக்கம் செய்து அதனை சிறந்ததொரு அரங்கு கலையாக மாற்றிய பெருமை கிருஷ்ணய்யர், முத்துலட்சுமி ரெட்டி மற்றும் ருக்குமணி அருண்டேல் போற்றோரைச் சாரும். இவ்வகையில் தமிழ் நாட்டில் பல நாட்டிய பேராசான்கள் தோன்றி தமிழ் நாட்டிய மரபினை காத்ததோடு பல புதுமைகளையும் தம் நாட்டிய நிகழ்ச்சிகளில் கையாண்ட கலையை மேலும் மெருகூட்டி வருகின்றனர்.

புதிய அணுகுமுறையில் மரபும் மாற்றமும் என்ற நான்காவது இயலில் நாட்டியத்தில் கையாளப் படுகின்ற புதிய மரபுகளை வெளிப்படுத்தும் இயலாக அமைந்துள்ளது. தற்காலத்தில் உலகெங்கிலும் நாட்டியம் பரப்புவதற்கு அடிப்படையாக உள்ளது ஊடகங்கள்தான். இதன் மூலமாகத்தான் ஒவ்வொரு கலைஞர்களின் திறமையும் மதிப்பிடப்படுகின்றது. ஊடகங்களின் வெளிக்காட்டப்படும் நாட்டிய நிகழ்ச்சிகளை மாணவர்கள் காணும் போது நாட்டியத்தில் பல புதுமைகளை கண்டுணரவும் அவற்றை தங்கள் நாட்டியத்தில் பயன்படுத்தவும் முடிகின்றது.

புதிய அணுகுமுறையை பயன்படுத்தும் தொழில் நுட்பங்கள் என்ற ஐந்தாவது இயலில் நாட்டியத்தில் கையாளப்படும் புதிய தொழில் நுட்பங்களைப் பற்றி ஆராயும் இயலாக அமைகிறது. பழங்காலத்தில் இணையத்தின் வாயிலாகவும் குறுந்தகடுகளின் மூலமாக பயிற்சி பெறுகின்ற நிலையாக மாறி யுள்ளது.

பரத நாட்டியத்தில் புதுமைகள் கையாளப் பட்டாலும் பழைய மரபுகளை அடியொற்றி புகுத்துவது இன்றியமையாத ஒன்றாக விளங்கு கின்றது. நம் முன்னோர்கள் வகுத்துத் தந்த பாதையினை அடியொற்றி உலகெங்கிலும் பரவச் செய்வது நம் அனைவரின் கடமையாகும். எதிர்கால ஆய்வாளர்கள் இந்த தலைப்பினை அடியொற்றி பின் வரும் ஆய்வுத் தலைப்பில் ஆய்வினை மேற்கொள்ளலாம்.

1. நாட்டியத்தின் பழைய மரபுகள்

2. நாட்டியத்தில் கையாளப்படுகின்ற புதிய தொழில் நுட்பங்கள்

3. நாட்டியப் பாடலில் பழமையும் புதுமையும்

4. நாட்டிய நாடகங்களில் புதிய அணுகுமுறைகள்

முனைவர் பட்ட ஆய்வாளர்
**தே. குமரன்**
பதிவு எண்: 1782
தமிழ்ப் பல்கலைக்கழகம், இசைத்துறை.



# வேலை

இருபத்தைந்து பேர் வேலை செய்யும் தகவல் அனுப்பும் செய்தி நிறுவனம் அது. நிறுவனத்தில் பணி செய்பவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பிரிவில் சிறந்தவர்களாக விளங்கினர். ஓரிருவர் மட்டும் அந்நிறுவனத்தின் முதலாளிக்கு எது பிடிக்குமோ அதைச் செய்வார்கள். முதலாளி நியாயமில்லாதவற்றைச் சொன்னாலும் கூட அதுதான் சரி என்பார்கள். மறுத்துப் பேச மாட்டார்கள். வேலை செய்வதிலும் தங்களை விட்டால் அந்த வேலைக்கு யாரும் இல்லை என்பதாகக் காட்டிக் கொண்டு, அப்படி ஒரு பிம்பத்தை முதலாளியின் மனதிலும் விதைத்திருந்தனர். இந்தக் கூட்டத்தில் நான்கு பேர் இருந்தார்கள். முதலாளி இல்லாத நேரத்தில் இவர்களும் இல்லாமல் போய்விடுவார்கள். முதலாளி இருந்தால் அவர்களும் இருப்பார்கள். மற்றவர்கள் எல்லாம் இவர்களுக்கு மட்டும் முதலாளி வருவது போவது எப்படித் தெரிந்து விடுகிறது என்று திகைத்துப் போய் தங்களது வேலைகளை கவனிக்கத் தொடங்கி விடுவார்கள்.

நால்வரில் சதீசு என்பவன் மற்ற மூவரையும் விட முதலாளியின் மனநிலைக்குத் தகுந்தாற்போல் நாடகம் போடுபவன். அவன் அவருக்கு மற்ற மூவரையும் விட நெருக்கமாக இருந்தான். அந்த நெருக்கத்தால் அவனுக்குத் தெரிந்த ஒருவனை முதலாளியிடம் கூறி வேலைக்குச் சேர்த்துவிட்டான். வந்தவன் பெயர் குமரன். குமரனுக்கு அந்த நிறுவனம் மிகவும் பிடித்துப் போய்விட்டது. முதலாளியிடம் அவனாகச் சென்று பேசுவதில்லை. அவர் என்ன சொல்கிறாரோ அதைச் செய்தான். அவனுக்கு கொடுத்த வேலையை முடித்துவிட்டு, மற்றவர்களுக்கு உதவி செய்தான். இதை முதலாளி பார்க்க வேண்டும் என்றோ, பாராட்ட வேண்டும் என்றோ அவன் செய்வதில்லை. அவனது குணம் அப்படி.

மற்றவர்களுக்கு உதவுவதோடு நிறுவனம் வளரவேண்டும் என்ற நோக்கில் பல வேலைகளை நிறுவனத்துக்காகச் செய்தான். குமரன் செய்த இந்த வேலைகள் அவனுக்கே தெரியாமல் முதலாளியின் கவனத்துக்கு சென்று கொண்டிருந்தன. முதலாளி அடுத்த சில மாதங்களில் குமரனை அழைத்து பேச ஆரம்பித்தார். நிறுவனத்தின் வளர்ச்சி குறித்து இருவரும் பேசினர். இதைப் பார்த்த நால்வர்குழு பொறாமைப்பட ஆரம்பித்து விட்டது.

சதீசு ஒரு நாள் குமரனை அழைத்து, குமரா முதலாளிக்கு இப்படி பாடுபட வேண்டும் நமக்கு என்ன தலையெழுத்தா? அவர் பணக்காரராக ஆகிக் கொண்டிருக்கிறார். நம்மை எங்கே கவனிக்கிறார்? எப்படி வேலை செய்தாலும் ஒரே சம்பளம்தான். நீ ஏன் அவரோடு சேர்ந்து அதிகமாக வேலை செய்து கொண்டிருக்கிறாய். உன் வேலையை மட்டும் பார் என்றான். குமரனுக்கு அவன் சொல்வதை மனதால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை என்றாலும், சதீசுதானே நம்மை இந்த வேலைக்குச் சேர்த்து விட்டான் என்ற நன்றியுணர்வோடு சரி என்று ஒப்புக்கு சொல்லிவிட்டு வந்தான்.

குமரனும் முதலாளியும் அடிக்கடி பேச ஆரம்பித்துவிட்டனர். சதீசால் தாங்க முடியவில்லை. மற்ற பணியாளர்களிடம் குமரனைப் பற்றி தப்பும் தவறுமாக பேசித் திரிந்தான். இதெல்லாம் குமரன் செவிகளுக்கும் வந்து சேர்ந்தது. இருந்தும் சதீசை குமரன் ஏன் இப்படிச் செய்கிறீர்கள் என்று ஒரு வார்த்தைகூட கேட்கவில்லை. ஆனால் முதலாளியிடம் இதுபற்றிச் சொன்னான். அவரோ நானும் இதைக் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறேன். நீங்கள் உங்களை வேலையைப் பாருங்கள். அவர்களைப் பற்றி சிந்திக்காதீர்கள் என்றார். அவர்கள் செய்வது தவறு என்று அறிந்தும் கூட அந்த நபர்களை அழைத்துக் கண்டிக்கவோ, வேலையை விட்டு நிறுத்தவோ முதலாளி முனையவில்லை. காரணம் நம்மிடம் வேலை பார்க்கிறவர்கள் என்ற நினைவு அவருக்குள் இருந்தது. ●

# ஈழம் வேண்டுமடி கிளியே

தரா. கார்த்திகை



ஈழம் வேண்டுமடி கிளியே – தமிழ்
ஈழம் வேண்டுமடி கிளியே
ஆழ வேண்டுமடி கிளியே – தமிழ்
ஆழ வேண்டுமடி கிளியே

உளண்டி உருண்டு தரும் தண்ணீர்
நாவில் படர்ந்து விழுந்து புரண்டோடி
பாய்ந்து தேகம் எங்கும் பரவி
உச்சி மண்டை குளிருமடி கிளியே

சுற்றி ஓடும் நல்ல அருவி
சுகக் காற்றை தந்துவிடப் பருகி – நான்
வேப்ப மர நிழலைத் திருகி – கள்
உண்ட மயக்கம் கொள்வேன் கிளியே

ஆம்பல் நிறைந்திருக்கும் – குளமும்
காம்பில் ஏறி நிற்கும் மீனும்
வானன் சரிந்திருக்கும் ஓடை
என்னில் காதல் கொள்ளுமடி கிளியே

பாலை பூத்திருக்கும் கோடும்
ஆலை தந்திருக்கும் சருகும்
மாலை நீண்டிருக்கும் பொழுதும் – அந்த
மண்ணில் மகிழ்ச்சியடி கிளியே

வாடை வீசுகின்ற நாளும்
வீரம் தான் சுமக்கும் தோளும்
ஊரில் காணுகின்ற காட்சி – என்னில்
வீரம் கொள்ளுமடி கிளியே

மையும் இல்லையடி கிளியே
பொய்யும் இல்லையடி கிளியே
தையல் அழகுடைய நாடு – எங்கள்
ஈழத் தாய்த் திரு நாடு

காய்ந்த நெல்லரிசிச் சோறும்
ஆய்ந்த காய்கறியின் வேகம்
பாய்ந்த மீன் குழம்புப் பாகல்
பசி தீர்க்கும் நாடு எந்தன் நாடு

சூடை மீனில் ஒரு பொரியல்
கூனி இறாலும் என நீளும்
தேங்காய்த் துரவல் தரும் மணமும்
குழல் பிட்டின் வாசனையின் குணமும்
என்னை ஆட்டி வைக்குமடி கிளியே

சுற்றம் கூடிய திருநாடும்
முற்றம் கூடிய பனைவீடும்
முருங்கைப் பூ அணில் ஆடும்
அங்கே பஞ்சம் இல்லையடி கிளியே

வற்றல் காய் கனியில் உண்டு
வற்றல் ஊன் மீனில் உண்டு
வடகம் வேம்பூவில் உண்டு – அந்த
நாடே எங்கள் திருநாடு

ஈழம் வேண்டுமடி கிளியே – தமிழ்
ஈழம் வேண்டுமடி கிளியே
ஆள வேண்டுமடி கிளியே – தமிழ்
ஆள வேண்டுமடி கிளியே

மந்தி மாவில் நின்று தாவி – அங்கே
பலா கொய்யா என்று குந்தி
சிந்தி வைக்கும் அந்தக் கனிகள் – எந்தன்
நாவில் ஊறுமடி கிளியே

முந்தி நட்டு வைத்த வாழை – எங்கள்
பந்தி வைக்க இலை நாளை
சந்தி வாசலிலே நின்று – நம்மை
வாழச் செய்யுமடி வாழை

வாழைக் காயில் ஒரு பொரியல்
வாழைப் பூவில் ஒரு வறையல்
வாழைத் தண்டில் ஒரு வறுவல் – என்னை
வாழ வைக்குமடி கிளியே

பச்சைப் பழம் என்றும் வாழை
மஞ்சள் பழம் என்றும் வாழை
மொந்தன் பழம் என்றும் வாழை – என்னில்
நிந்தை கொள்ளுமடி கிளியே

இதரைப் பழம் என்றும் வாழை
கதலிப் பழம் என்றும் வாழை
யானைப் பழம் என்றும் வாழை
வாழ்வைத் தந்து நிற்குமடி கிளியே

வாழைக் குட்டி என்று வந்து
வாழைக் கன்று என்று வளர்ந்து
வாழை மரம் என்று உயர்ந்து
வாழ்வைத் தந்து நிற்கும் வாழை
வாழை வாழையடி கிளியே

ஈழம் வேண்டுமடி கிளியே – தமிழ்
ஈழம் வேண்டுமடி கிளியே
ஆள வேண்டுமடி கிளியே – தமிழ்
ஆள வேண்டுமடி கிளியே

தொடரும்...




# தமிழகத்தில் ஒவ்வொரு ஊருக்கும் ஒரு சிறப்பு உண்டு. அந்த ஊர்களுக்கு சிறப்பு எவற்றால் உண்டானது? பார்ப்போமா?

ஈரோடு மஞ்கள், துணி
மார்த்தாண்டம் தேன்
ஆரணி அரிசி
கோயப்புத்தூர் மோட்டார் உதிரிப்பாகங்கள், பருத்தி.
திருநெல்வேலி அல்வா.
திருவில்லிபுத்தூர் பால்கோவா
கோவில்ப்பட்டி கடலை மிட்டாய்
பண்ருட்டி பலாப்பழம்
பவானி சமுக்காளம்
உசிலம்பட்டி ரொட்டி
நாச்சியார்கோவில் விளக்கு, வெண்கலப் பொருட்கள்
பொள்ளாச்சி தேங்காய்
வேதாரண்யம் உப்பு
சேலம் எவர்சில்வர், மாம்பழம், அலுமினியம், சேமியா
சாத்தூர் காராசேவு, மிளகாய்
மதுரை மல்லிகை, மரிக்கொழுந்து
மயிலாடுதுறை கருவாடு
திருப்பூர் பனியன், ஜட்டி
கும்பகோணம் வெற்றிலை, சீவல்
தர்மபுரி புளி, தர்பூசணி
இராஜபாளையம் நாய்
தூத்துக்குடி உப்பு
தஞ்சாவூர் கதம்பம், தட்டு, தலையாட்டி பொம்மை
நீலகிரி தைலம்
ஊட்டி உருளைக்கிழங்கு, தேயிலை, வர்க்கி
கல்லிடைக்குறிச்சி அப்பளம்
காரைக்குடி ஓலைக்கூடை
செட்டிநாடு பலகாரம்
திருபுவனம் பட்டு
குடியாத்தம் நுங்கு
கொள்ளிடம் பிரம்புப் பொருட்கள்
ஆலங்குடி நிலக்கடலை
கரூர் கொசுவலை
திருப்பாச்சி அரிவாள்
காஞ்சிபுரம் பட்டு, இட்லி
நாகபட்டினம் கோலா மீன்
திண்டுக்கல் பூட்டு, மலைப்பழம்
பத்தமடை கோரைப்பாய்
பழனி பஞ்சாமிர்தம், விபூதி
மணப்பாறை முறுக்கு, மாடு
உடன்குடி கருப்பட்டி
கவுந்தம்பட்டி வெல்லம்
ஊத்துக்குளி வெண்ணெய்
கொடைக்கானல் பேரிக்காய்
குற்றாலம் நெல்லிக்காய்
செங்கோட்டை, பிரானூர் புரோட்டா, கோழிகுருமா
சங்கரன்கோவில் பிரியாணி
அரியலூர் கொத்தமல்லி
சிவகாசி வெடி, தீப்பெட்டி, வாழ்த்து அட்டை
கன்னியாகுமரி முத்து, பாசி, சங்குப் பொருட்கள்
திருச்செந்தூர் கருப்பட்டி
குளித்தலை வாழைப்பழம்
ஆம்பூர் பிரியாணி
ஒட்டன்சத்திரம் முருங்கைக்காய், தக்காளி
ஓசூர் ரோஜா
நாமக்கல் முட்டை
பல்லடம் கோழி
குன்னூர் கேரட்
பாலக்காடு பலாப்பழம்
ஆற்காடு மக்கன்பீடா
வாணியம்பாடி தேனீர்
போடி இலவம்பஞ்சு, ஏலக்காய்
கம்பம் திராட்சை
பெரியகுளம் மாம்பழம்
சின்னமனூர் செங்கரும்பு
சின்னாளப்பட்டி சுங்குடிச்சேலை
வடுகப்பட்டி மலைப்பூண்டு



# ஆதிச்சநல்லூர் தமிழர் நாகரிகத்தின் அடையாளம்



இந்தியாவிலேயே முதன் முதலாகத் தொல்பொருள் ஆய்வு நடத்தப்பட்ட இடம் ஆதிச்சநல்லூர் என்பதில் இருந்தே அந்த இடத்தின் முக்கியத்துவத்தை அறிந்து கொள்ளலாம். 114 ஆண்டுகளுக்கு முன் அங்கே விரிவான முறையில் ஆய்வை மேற்கொண்ட ஆங்கிலேயரான அலெக்சாண்டர் ரியா, ஆதிச்சநல்லூர் போலவே தாமிர பரணி ஆற்றங்கரை நெடுகிலும் பழங்காலத் தமிழர்கள் வாழ்ந்ததற்கான அடையாளங்கள் மேலும் பல இடங்களில் புதையுண்டு கிடக்கின்றன என்பதையும் கண்டுபிடித்தார்.

ஆதிகால மக்கள் வாழ்ந்த இடம் தாமிரபரணி ஆற்றங்கரையே என்பதை அறிந்த அவர் அங்கே மொத்தம் 37 இடங்களில் தொல்பொருள் ஆய்வு நடத்தப்பட வேண்டும் என்பதை வலியுஸத்திய தோடு, அந்த இடங்களில் எல்லாம் சிறிய அளவில் ஆய்வுகளையும் மேற்கொண்டார். அதாவது, தாமிரபரணி ஆற்றங்கரை ஓரம் உள்ள 1) ராஜவல்லி பரம்பு, 2) பாலாமடை, 3) மணப்படை வீடு, 4) கீழநத்தம், 5) பாளையங்கோட்டை, 6) கிருஷ்ணா புரம் பரம்பு, 7) வடக்கு வல்லநாடு, 8) வல்லநாடு, 9) அகரம், 10) முறப்பாடு, 11) வசவப்பபுரம், 12) அனவரத நல்லூர், 13) விட்டிலாபுரம், 14) கொங்கராயகுறிச்சி, 15) கருங்குளம், 16) ஆதிச்சநல்லூர், 17) திருவைகுண்டம், 18) திருப்புளியங்குடி, 19) புதுக்குடி, 20) வெள்ளூர், 21) கால்வாய், 22) மளவராயநத்தம், 23) ஆழ்வார்த்திருநகரி, 24) அழகிய மணவராளபுரம் செம்பூர், 25) திருக்கோளூர், 26) அப்பன் கோவில், 27) தென்திருப்பேரை, 28) புறையூர், 29) அங்கமங்கலம், 30) குரும்பூர், 31) நாலுமாவடி, 32) நல்லூர், 33) சுகந்தலை, 34) கொற்கை, 35) மாறமங்கலம், 36) காயல்பட்டணம், 37) வீரபாண்டியன்பட்டணம் ஆகிய இடங்களை

அலெக்சாண்டர் ரியா கண்டறிந்து அங்கே அகழ் வாய்வுகளை நடத்தினார்.

இந்த இடங்களில் எல்லாம், ஆதிகாலத் தமிழர்கள் சிறிய கிராமங்கள் என்ற அளவில் வாழ்ந்து இருக்கலாம் என்றும், ஆதிச்சநல்லூர் மற்றும் கொற்கை ஆகிய இடங்களில் மட்டுமே மிகப்பெரிய வணிகப் பயன்பாட்டுன் மக்கள் அதிக அளவில், பெரிய அளவில் ஆய்வுகள் ஏது மேற்கொள்ளப்படவில்லை. 2004ஆம் ஆண்டு தாமிரபரணி ஆற்றங்கரையில் மீண்டும் ஆய்வு நடத்திய இந்திய தொல்பொருள் ஆய்வுக் குழுவினர், அலெக்சாண்டர் ரியா வரைந்த ஒரு வழிகாட்டி வரைபடத்தினை வைத்துக் கொண்டு எங்கெல்லாம் முதுமக்கள் தாழிகள் உள்ளன என கண்டுபிடித் தனர். அவர் எழுதி இருந்த குறிப்புப்படி, நாட்டார் குளம் என்னும் இடத்தில் முதுமக்கள் தாழி இருப்பதை அறிந்தனர். ஆனால் அங்கு ஆய்வு நடத்துவதற்கு பல ஆண்டுகளுக்கு முன்பே அங்கு உள்ள இடங்களுக்கு மேலே மக்கள் வீடுகளைக் கட்டி குடியேறி விட்டனர். அரசு சமுதாய நல்க்கூடத்தினைக் கூட இந்த பகுதியிலேயே கட்டி உள்ளனர். அதனால், அங்கு மேற்கொண்டு ஆய்வு நடத்த இயலாமல் போய்விட்டது.

இங்கு வீடு கட்டும் போது முதுமக்கள் தாழிகள் வெளிப்பட்டன என்று நெல்லையின் முதுபெரும் எழுத்தாளர் ஆர்.எஸ்.ஜேக்கப் தனது பயண நூலில் குறிப்பிட்டுள்ளார். இதுபோல் மேலும் பல இடங்கள் முழுவதுமாக ஆய்வுக்கு உட்படுத்தப்பட வில்லை என்ற போதிலும், ஆய்வு மேற்கொண்ட ஒரு சில இடங்களில் மட்டும் தாமிரபரணி ஆற்றங்கரை நாகரிகம் பற்றி ஓரளவுக்குத் தெரிய வந்து இருக்கிறது. இந்தியாவிலும் சரி, உலகின் மற்ற பகுதிகளிலும் சரி, ஒரே ஆற்றங்கரை பகுதியில் இந்த அளவுக்கு அதிகமான இடங்களில் தொல்பொருள் ஆய்வு நடத்தப்பட்டது இல்லை என்ற பெருமை தாமிரபரணி ஆற்றங்கரை நாகரிகத்துக்கு உண்டு.

ஆனால், இவ்வளவு பாரம்பரியம் மிக்க நாகரிக வரலாறு, உலக அரங்கில் அதிகமாக எடுத்துச் சொல்லப்படாமலேயே இருக்கிறது என்பதோடு, உள்ளூரிலேயே பலரும் தெரிந்து கொள்ளாமல் இருட்டறையில் அடைந்து கிடக்கிறது என்பதுதான் வேதனை. உலகின் மற்ற பகுதிகளில் நடைபெற்ற தொல்பொருள் ஆய்வுகள் குறித்தும், அங்கே வாழ்ந்த மக்களின் நாகரிகம் பற்றியும் விரிவான தகவல்கள் அடங்கிய பல நூல்கள் வெளியாகி இருக்கின்றன. ஆனால், அவற்றுக் கெல்லாம் முந்திய நாகரிகமான தாமிரபரணி ஆற்றங்கரை தமிழர்களின் நாகரிக வரலாறு பற்றி எழுதப்பட்ட நூல்களை விரல் விட்டு எண்ணி விடலாம்.

தாமிரபரணி ஆற்றங்கரை நாகரிகம் பற்றி முதன் முதலாக ஓர் ஆவணத்தைப் பதிவு செய்தது. அங்கே ஆய்வு நடத்திய அலெக்சாண்டர் ரியா தான். அங்கு அவர் நடத்திய ஆய்வுகளின்போது கிடைத்த ஏராளமான பொருட்கள் அனைத்தையும் வரிசைப் படுத்தி அவை பற்றிய தெளிவான குறிப்புகளை நீண்ட பட்டியலாக வெளியிட்டார். அந்தப் பட்டியல் தான் ஆதிச்சநல்லூர் நாகரிக வரலாற்று தகவல் அடங்கிய முதல் புத்தகம் ஆகும்.

சிந்துசமவெளியில் தொல்பொருள் ஆய்வு நடத்திய ஆர்.டி.பானர்ஜி மற்றும் ஜான் மார்ஷல், மார்ட்டிமர் வீலர், எம்.எஸ்.மெக்கே வாட்ஸ், டாக்டர் சி.மக்ளீன், பேராசிரியர் ஜி.எலியட் சுமித், பேராசிரியர் எஸ். ஜக்கர்மேன், அறிஞர் கில்பர்ட் சிலேட்டர் போன்ற அறிஞர்களும் தாங்கள் எழுதிய ஆய்வுக்கட்டுரைகளில் ஆதீச்சநல்லூர் நாகரிகத்தை சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். ஆனால், அதன் பிறகு வெகுகாலமாக ஆதிச்சநல்லாலூர் நாகரிகம் பற்றி, தமிழர்கள் உள்பட யாரும் கவலைப்பட்ட தாகத் தெரியவில்லை.

சாத்தான்குளத்தைச் சேர்ந்த அறிஞர் அராகவன், 40 ஆண்டுகளுக்கு முன்பு, ஆதிச்சநல்லூர் நாகரிக வரலாற்றை ஆவணப்படுத்த வேண்டும் என்ற நல்ல நோக்கத்துடன், பெரும் முயற்சி செய்து பல ஆதாரங்களையும் தேடிப்பிடித்து, 1978ஆம் ஆண்டில், ஆதிச்சநல்லூரும் பொருநை வெளி நாகரிகமும் என்ற நூலை வெளியிட்டார். ஆதிச் சநல்லூர் நாகரிகத்தின் பெருமை பேசும் முதல் தமிழ்ப் புத்தகமாக அது வெளிவந்தது என்று சொன்னால் மிக அல்ல.

அதன்பிறகு ஒரு சிலர், தாங்கள் எழுதிய தமிழர்களின் பரலாறு தொடர்பான நூல்களில் ஆதிச்சநல்லூர் குறித்து ஆங்காங்கே ஒரு சில தகவல்களை மட்டும் குறிப்பிட்டார்கள். தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றத்தின் முன்னாள் துணைத்தலைவரும், அழகப்பா பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தருமான முனைவர் அ. ராமசாமி, 2013ஆம் ஆண்டு எழுதிய தொன்மைத் தமிழர் நாகரிக வரலாறு என்ற நூலில் ஆதிச்சநல்லூர் நாகரிகம் தொடர்பான பல அரிய தகவல்களைத் தெரிவித்து இருக்கிறார்.

திருநெல்வேலி மாவட்டம் உடையார் பட்டியைச் சேர்ந்த அறிஞர் அ.அருணாசலம், தண்பொருநை நாகரிகம் என்ற தலைப்பில் எழுதிய நூலிலும் தாமிரபரணி ஆற்றங்கரை நாகரிகம் மற்றும் ஆதிச்சநல்லூர் குறித்து பல செய்திகள் சொல்லப்பட்டுள்ளன. ஆன்மிக எழுத்தாளர் வரலாற்று ஆசிரியர் என்று பன்முக அடையாளம் கொண்ட முத்தாலங்கறிச்சி காமராசு, ஆதிச்ச நல்லூர் ஆய்வுகள் என்ற அருமையான நூலை எழுதி இருக்கிறார். வருங்கால சமுதாயத்துக்கு ஆதிச்ச நல்லூர் நாகரிக வரலாறு சென்று போய்ச் சேர வேண்டும் என்ற தணியாத ஆர்வத்தில் அந்த நூல் எழுதப்பட்டு இருக்கிறது.

தாமிரபரணி ஆற்றங்கரையில் பிறந்த இவர், ஆதிச்சநல்லூர் பற்றி யார் அறிந்துகொள்ள விரும்பினாலும் அவர்களை அங்கே அழைத்துச் சென்று விலாவாரியாக விளக்கிச் சொல்வதில் சளைப்பதே இல்லை. பிரபல எழுத்தாளர் ஜெயமோகன் மற்றும் களியன் பாலன் உள்பட சில எபத்தாளர்களும், தொல்பொருள் ஆய்வாளர் எஸ். ராமச்சந்திரன் உள்பட சிலரும், ஆதிச்சநல்லூர் நாகரிகம் பற்றி கட்டுரை எழுதி இருக்கிறார்கள். நெல்லை கலெக்டராக இருந்த ஆஷிஸ்குமார் ஆதிச்சநல்லூர் நாகரிகம் பற்றி அறிந்து வியந்தார். அந்த நகசாரிக வரலாறு என்றென்றும் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் ஆதிச்சநல்லூர் பகுதியிலேயே ஓர் அருங்காட்சியகம் கட்ட ஏற்பாடு செய்தார்.

அதுபோல அங்கு கலெக்டராக பணியாற்றிய ரவிக்குமார், ஆதிச்சநல்லூர் ஆய்வின்போது எடுத்த புகைப்படங்கள் மற்றும் முதுமக்கள் தாழிகளின் மாதிரைகளைச் செய்து வைத்து அந்த அருங்காட்சியகத்தை மேம்படுத்த முயற்சி செய்தார். ஆனால் அவரது எண்ணம் நிறைவேறவில்லை. நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக தமிழ்த்துறை முன்னாள் தலைவர் தொ. பரமசிவனுக்கு ஆதிச்சநல்லூர் மீது அதிகப் பற்று உண்டு. அவர் ஆதிச்சநல்லூர் குறித்து விரிவான ஆய்வுகள் செய்துள்ளார். நடிகர் கமல்ஹாசன் தனது மருதநாயகம் படப்பிடிப்பை இங்கே வைத்துக் கொள்ளலாம் என லெக்கேசன் பார்த்து விட்டுச் சென்றார் என்றும் ஒரு தகவல் உண்டு. ஒருவேளை இதுபோன்ற சினிமா படப்பிடிப்புகள் அங்கே நடத்நால் ஆதிச்சநல்லூர் பெருமை குறித்து வெளிஉலகிற்கு தெரிய அதிக வாய்ப்பு உண்டு.

கருங்குளம் முன்னாள் பஞ்சாயத்துத் தலைவைர் மறைந்த புளியங்குளம் ஆர். கே. ஆர். ராஜா ஆதிச்சநல்லூர் நாகரிக வரலாற்றுத் தொன்மையை வெளிக்கொணர பெரும் முயற்சி செய்தார். ஆதிச்சநல்லூர் பற்றிக் கேள்விப்பட்டு அதனைக் காணவரும் மக்களுக்கு ஆடு மேய்த்துக் கொண்டே இலவச வழிகாட்டியாக இருந்தவர் ஆதிச்சநல்லூரைச் சேர்ந்த சிதம்பரம். இவர் ஆதிச்சநல்லூரின் புகழை வெளிக்கெண்டு வரவேண்டும் என்று உள்ளூர் அதிகாரி முதல் நாட்டின் ஜனாதிபதி வரை பலருக்கும் சளைக்காமல் மனுக்களை தொடர்ந்து எ!ழுதி வந்தவர். ஆர்.கே.ஆர். ராஜா மற்றும் சிதம்பரம் ஆகிய இருவரும் தற்போது உயிரோடு இல்லை. இது போல ஒரு சில அறிஞர்களே ஆதிச்சநல்லூர் நாகரிக வரலாற்றை ஆவணப்படுத்த பெரும் முயற்சி எடுத்து இருக்கிறார்கள்.

ஆதிச்சநல்லூர் ஆய்வுகள் தொடர்பாக ஆங்காங்கே பல கருத்தரங்கங்களும் நடத்தப்பட்டு இருக்கின்றன. பெரியார் ஈ.வெ.ராமசாமி நாகம்மை கல்வி ஆராயச்சி அறக்கட்டளை தலைவர் வே. ஆனைமுத்து நடத்திய, ஆதிசச்நல்லூர்ச் சிறப்பும் எதிர்காலத் திட்டங்களும் என்ற கருத்தரங்கு இதில் குறிப்பிடத்தக்கது. மேலும் பல அறிஞர்களும் பல்வேறு காலகட்டங்களில் ஆசிச்சநல்லூர் நாகரிக வரலாறு தொடர்பாக கருத்தரங்குகளை நடத்தி, ஆய்வுக்கட்டுரைகளையும் சமர்ப்பித்த இருக்கிறார்கள். இணையதளத்திலும் இது தொடர்பான பல கட்டுரைகளைக் காணமுடிகிறது. பலர் தங்கள் முகநூல் பக்கத்தில் ஆதிச்சநல்லூர் நாகரிக வரலாற்றைக் கொண்டாடி இருக்கிறார்கள்.

புத்தகங்களை வெளியிட்டது மிகக்குறைந்த எண்ணிக்கையில் அவை விற்பனை ஆனது சிறிய அறைக்குள் அமர்ந்து ஒரு சிலரின் கைத்தட்டல்களுக்கு இடையே கருத்தரங்குகளை நடத்தியது. விரல் விட்டு எண்ணக்கூடியவர்கள் மட்டுமே படிக்கக்கூடிய ஆய்வுக்கட்டுரைகளை வெளியிட்டது. இணையதளத்தில் தேடுவதற்கு எத்தனேயோ விசயங்கள் இருக்கும் நிலையில், ஆதிச்சநல்லூர் பற்றி அறிந்து கொள்ள, அது தொடர்பான முகநூல் பக்கங்களைப் பார்ப்பது சொற்பமே என்பவை போன்றவற்றால், அறிஞர்கள் பலர் அதி தீவிர முயற்சிகளை மேற்கொண்டாலும், ஆதிச்சநல்லூர் பற்றியும், தாமிரபரணி நாகரிக வரலாறு குறித்தும் இன்றைய இளைஞர் சமுதாயத்தினர் பெரும்பாலானவர்கள் ஒன்று அறியாதவர்களாகவே இருக்கிறார்கள். இந்த அவல நிலைக்குக் காரணம் என்ன? இந்த நிலைமை மாறி ஆதிச்சநல்லூர் நாகரிக வரலாறு என்றென்றும் போற்றப்பட என்ன செய்யப்போகிறோம். ●

சிறுகதை

ஏகாம்பரம் இப்போதும் அதிகாலையிலே எழுந்து விடுவார். அழகாய் அமையும் காலிப்பு அவருக்கு விருப்பமான ஒன்று. உறக்கத்தை அவரால் எப்போதும் ஏற்றுக் கொள்ளவே முடிவதில்லை. மூடிக்கட்டிப் படுப்பதும் மூக்கு முட்ட உறங்கு வதும் மண்ணுக்கு விரோதி என்பார். அவர் எழுந்ததும் மகள் படுத்திருக்கும் படுக்கை அறைக்குச் செல்வார். சென்று நெற்றியிலே ஒரு முத்தமிடுவார். அப்புறம் "அம்மா எழுந்திரு நேரமாச்சு" மகள் காதிலே மெதுவாக அந்தக் காலைப் பொழுதின் மெல்லிய காற்றைப் போல உரைப்பார். அந்தக் காலைப் பொழுதில் தந்தையின் வார்த்தை கோவிலில் எழும் மந்திரம் போல இனிய பிரசாதமாக அமையும். சரியப்பா என்றபடி எழுந்து மெலிந்த உடலில் சோம்பல் முறித்து கிளம்பி விடுவாள். கிணற்றின் உளண்டி உருண்டு எழும் ஓசை ஊரில் இனிக்கும். மெல்லிய இருள் விலக்கி எழுவான் கரையில் எழச் செய்யும்.

அப்பால் மூன்று பசுக்களில் ஒன்றில் ஒரு செம்பு பால் கறந்து கொண்டு வந்து தந்தையிடம் கொடுப்பாள். பூக்கள் ஒரு கூடைக்குள் பறிந்து வந்து கொடுப்பாள். தேமா, நந்தியாவெட்டை, செவ் வருத்தை எல்லாம். எல்லாம் அவளைப் போல அழகாக இருக்கும். ஏகாம்பரம், பாலை, பூக்கூடையை மகளிடம் வேண்டியபடி தன் சிவன் கோவிலுக்குச் சென்று விடுவார். அவள் கறந்த வெள்ளைப் பசுவின் பால், அவள் பறித்த அந்த அற்புதமான வாசனை மிக்க பூக்கள் தேமா, நந்தியாவெட்டை, அழகுச் செவ்வருத்தை எல்லா வற்றிலும் அர்ச்சனை, பூசை, தோவராம், திருவாசகம், எல்லாமே ஊர் பேரில், ஊரார் பேரில், மகள் பேரில் ஓதி,



# அவள் வந்து விடுவாள்

பாடி, மணி ஒலித்து, கற்பூர வாசனை எங்கும் எழுந்து கமழ மகளுக்காக, ஊருக்காக ஒரு கணம் கண் மூடி இறைவனை வேண்டி வழிபட்டு ஏகாம்பரம் கண் திறப்பார்.

அப்புறம் சிவ விக்கிரகத்தை தீர்த்தம் கொண்டு குளிப்பாட்டி, அலங்கரித்து, குங்குமம், சந்தனம் எல்லாம் சாத்தி, மாலை அணிவித்து, மலர் கொண்டு தூவி, மந்திரங்கள் ஒலித்து, ஊருக்காக, தன் நிலத்திற்காக, தன் மக்களுக்காக, புங்குடுதீவு, அதன் வளம், அதன் பண்பாடு, தமிழ்க்கலை, மக்கள், குடிகள், குழந்தைகள் நீண்ட காலம் வாழணும், வாழ்ந்து வளம் பெறணும் என்று ஏகாம்பரம் சிவனை நோக்கிப் பாடுவார். "சிவனே என் பெருமானே எந்த ஆபத்தும் வரக்கூடாது மக்களைக் காப்பாற்று" என்றபடி பூக்கள் எறிந்து மந்திரம் உரைப்பார். பாக்கள் பாடி தூபமிடுவார். ஏகாம்பரத்தின் பிரார்த்தனை எப்போதும் அதுவாகவே இருந்தது.

வளமை போலவே ஏகாம்பரம் அதிகாலையிலே எழுந்து குகதாம்பாள் படுக்கை அறைக்குச் செல்வார். ஏகாம்பரம் கதவைத் திறந்து, இருண்டு கிடந்த அறையுள் நுழைந்து கதவருகே அமர்ந்து கண்ணைத் துடைத்தபடி அவள் படுக்கையைப் பார்ப்பார், அவள் உடுக்கையைப் பார்ப்பார், அவள் தலையணை, அவள் தலை வாரும் சீப்பு, அவளது நிலைக் கண்ணாடி, நீண்ட சாளரளம், கந்த சஷ்டி கவசம், தூசி படிந்து போன முன் அட்டை முடித்து மடித்து வைத்த அந்தத் தாள் எல்லாமே எல்லாமே மனதை உருக்கி ஏகாம்பரம் கண்ணில் மகளின் நிழல் தெரியும். அவள் ஓடி வரும் வருகை தெரியும். ஏகாம்பரம் ஒவென்று அழுவார்.

அப்படியே பார்வை விலகாது அந்த அறையைப் பார்ப்பார். பார்த்தபடி மகள் குகதாம்பாள் வந்து விடுவாள். என்னை விட்டு எங்கு போய் விடப் போகிறாள் என்றபடி இருளின் காதிற்கு உரைத்து வாசலை வெறித்துப் பார்த்தார். அவர் காதிற்கு உளண்டிச் சத்தம் கேட்கும். மகளின் செல்லமான அந்தக் குரல் கேட்டபடியே இருக்கும். அவளது வருகை வந்தபடியே இருக்கும். முற்றம் கடந்து தேமா, அதில் தான் பூக்கள் பறிப்பாள். அது கடந்தால் கூப்பிடு தொலைவில் மாட்டுப்பட்டி, அழகான பனங்கூடல், புல் வெளி, எரு வாசனை எல்லாமே எல்லாமே இயற்கை. அவளைப்போல அந்த மண்ணைப் போல மெல்லி பூ மணம் சுமக்கும் நிலம், புங்குடுதீவு நிலம்.

ஏகாம்பரம் எழுந்து மாட்டுப்பட்டி வரை செல்வார். அப்பால் புல்வெளி, அது கடந்தால் பனங்கூடல் அங்கே தான் அவள் இறுதியாகக் கண்மூடிக் கிடந்தாள். "குகதாம்பாள், குகதாம்பாள் நேரமாச்சு எழுந்திரு." "இதோ வருகிறேன் அப்பா" என்று அந்த அன்புக் குரல் அவரது காதில் மட்டும் ஒலிக்கும். அவளது வருகை ஒலி, அசைவு எல்லாமே எல்லாமே அவருக்குக் கேட்கும். ஆனால் அவள் வரமாட்டாள். அப்பால் ஏகாம்பரம் அந்த பனங்கூடல் பக்கமாகச் செல்வார். "மகளே மகளே வாம்மா நேரமாச்சு" என்றபடி அவளைத் தேடியபடி அவள் உறங்கிப் போன உறைந்து போன இடத்தில் ஆசையோடு உட்கார்ந்து அந்த மண்ணோடு பேசத் தொடங்குவார். அவர் பேசுவது இப்போது யாருக்கும் புரியாது. ஆனால் மகளுக்கும் அந்த மண்ணிற்கும் பனங்கூடலுக்கும் நீள்கின்ற புல்வெளிக்கும் நன்கு புரியும்.

ஏகாம்பரம் பக்கத்தே கிடக்கும் சாவோலையைப் புரட்டிப் பார்ப்பார். அப்புறம் அதனைத் தொட்டு வணங்குவார். பின்னர் அதனோடு பேசத் தொடங்குவார். காவோலையே என் பனங்கூடல் காவோலையே என் மகள் வந்து விடுவாள்.

அவள் ரொம்பத் தைரியசாலி. என் மகளை ஏன் அப்படிச் செய்தார்கள்? ஆடைகள் உருவி, கொடுமைப்படுத்தி கயவன், பாதகன், என் பச்சிளம் குழந்தையைக் குதறி, கொடுமை செய்து, மூடன், கொடூரன் ஆனாலும், என் மகள் வந்து விடுவாள் இல்லையா காவோலை. என் மகள் என்னையே நினைத்திருப்பாள். ஏங்கித் தவித்து அழுதிருப்பாள். தகித்தே போய் இருப்பாள் இல்லையா காவோலை. நீ மட்டும் அன்று அவளை மறைத்த மானம் காத்து மூடிக் கிடந்தாய். பாவம் அவள் பிஞ்சு, ஏதும் அறியாள் என்றபடி காவோலையை அணைத்து புல்வெளி கடந்தத நோக்கினார் ஏகாம்பரம். இன்னும் சிங்கள தேசத்தில் இருந்து வந்த கொடியவர் காவலரண் அகலவே இல்லை. அதற்கிடையில் அந்த வெளியில் மகளது வருகை மட்டும் ஐயர் கண்களில் தெளிவாய்த் தெரிந்தது. பாற்செம்பும் பூக்கூடையும் அவளது கைகளில் இப்போது இல்லையென்று....

**தூரா. கார்த்திகை.**



# உலகத் தாய்மொழி தினம்

ஒரு நாடு பிரிந்து தனி நாடானதுக்குக் காரணமே தாய் மொழி தான் என்பதே, பிப்ரவரி 21ஆம் நாளின் பின்னணி வரலாறாகும். அந்த நாடு வங்கதேசம். ஒருங்கிணைந்த பாகிஸ்தானில் (1971 க்கு முன்) பாகிஸ்தானியர் 2.5 கோடியும், வங்காளிகள் 4.4 கோடியுமாக இருந்தனர். 1948 பிப்ரவரி 23ஆம் நாளில் கூடிய, பாகிஸ்தான் அரசியல் சட்ட நிர்ணய சபை உருது மொழியையும் ஆங்கிலத்தையும் மட்டுமே ஏற்றுக் கொண்டது. அரசு மொழிகளாக இவ்விரண்டு மட்டுமே நீடிக்கும் என முடிவு செய்தது வங்காள மொழி புறக்கணிக்கப்பட்டது.

தீரேந்திரநாத் என்ற வங்காளி வங்காள மொழியையும் இணைக்க வேண்டும் என வற்புறுத்தினார். அவருடைய கோரிக்கை பாகிஸ்தான் பாராளுமன்றத்தில் தோற்கடிக்கப் பட்டது. வங்காளத்தில் போராட்டம் வெடித்தது. அப்போராட்டம் 1952இல் மாணவர்களின் போராட்டமாக உருவெடுத்தது.

1952, பிப்ரவரி 21ஆம் நாளில், டாக்காவில் மாணவர்களின் போராட்டத்தை ஒடுக்க, இராணுவம் துப்பாக்கிச் சூடு நடத்தியது. 9 வயது சிறுவன் உட்பட 5 பேர் உயிரிழந்தனர். அன்றி லிருந்து இன்று வரை இதே நாள் மொழிப்போர் ஈகிகள் நாளாகக் கொண்டாடப் பட்டு வருகிறது. இந்நிகழ்வு அரசியல் போராட்டமாக வெடித்தது. வங்காளிகளுக்குத் தனி நாடு வேண்டும் என்ற கோரிக்கை முன் வைக்கப்பட்டது. உருதுவையும் ஆங்கிலத்தையும் ஏற்க மாட்டோம் எனப் போராட்டம் தொடர்ந்தது. இந்நிலையில் 1971 இல் வங்கம் தனி நாடாயிற்று. தாய்மொழிக்காக நடந்த போராட்டம் வெற்றி பெற்றது.

பின்னர் 1988 ஆம் ஆண்டு கனடாவில் வாழ்ந்து வந்த வங்காளியரான ரபி இல் இசுலாம் என்பவர், ஐ. நா மன்றத்தின் மேனாள் பொதுச் செயலாளர் கோபி அனானுக்கு ஒரு விண்ணப்பத்தை அனுப்பினார். உலகத் தாய் மொழிகள் நாளை ஐ.நா அறிவிக்க வேண்டும். தங்கள் போராட்டம் தொடங்கிய 21ஆம் நாளையே தாய்மொழி நாளாக்க வேண்டும் என்ற கோரிக்கை ஏற்கப்பட்டு அறிவிக்கப்பட்டது. வங்காளத்தில் மாணவர் போராட்டம் வென்று வங்கதேசம் உருவானது. வங்காளம் அரசு மொழியாயிற்று.

## உலகத் தாய்மொழி நாள் ஏன் உருவானது?

# எப்படி உருவானது?




# தமிழரின் வானியல்

நிலவை திங்கள் என்று கூறுவர். மேலும் பல பெயர்களும் திங்களுக்கு உண்டு. திங்கள் என்பது, இனிமையான தேன் என்ற பொருளைத் தரும். நிலவின் தன்மையை விளக்கும் சொல் இது. தீங்கள் திங்கள் ஆனது. நில்லாமல் சுற்றி வருவதால், நிலா எனப்பட்டது. புவிக்கும் ஞாயிற்றுக்கும் மத்தியில் இருப்பதால் மதி எனப்பட்டது. தமிழில் மாதத்திற்கும் திங்கள் என்ற சொல்லே பயன்படுத்தப்படுகிறது.

திங்கள் ஒரு முறை சுற்றி வர எடுத்துக் கொள்ளும் 28 நாட்களே ஒரு மாதம் என கணக்கிடப்பட்டது. இச்சுற்றில் வளர்பிறை, தேய்பிறை என இரு நிலைகள் உண்டு. மறைந்து போன நிலவு, மீண்டும் பிறத்தலால் பிறை எனப்பட்டது. எபிரேய மொழியில் ஒரு மாதம் இரு நிலைகளாகவே கருதப்பட்டு, ஈரா என்று சொல்லப்பட்டது. ஈரா என்ற சொல் தமிழைப் போலவே மாதத்தையும் நிலவையும் குறிக்கும். ஈர் என்ற சொல் இரண்டாக்குதல் என்ற பொருளைத் தரும். ஈர் ஈரண்டு இரண்டு என்று ஆனது. தமிழர்கள் நிலவின் சுழற்சியை அடிப்படையாக் கொண்டே, நாள் காட்டியை உருவாக்கினர். இப்போதும் கூட தமிழ்நாட்டில் நடைபெறும் திருவிழாக்கள் அனைத்தும் நிலவு நாள்காட்டியின் அடிப்படையிலேயே நிகழ்கின்றன.

தமிழர்களைப் போலவே மேற்கே புலம்பெயர்ந்த தமிழர்களும் நிலவு நாள்காட்டியையே பயன்படுத்தி வந்தனர். சுமேரியர், பாபிலோனியர், எபிரேயர், அராபியர், எகிப்தியர் என்றவாறு, நிலவு நாள்காட்டியை பயன்படுத்தியவர்களின் பட்டியல் விரியும். இன்றும் வட எபிரேயரும் (யூதரும்) அராபியரும் (இசுலாமியரும்) நிலவின் நாட்காட்டியையே பயன்படுத்தி வருகின்றனர்.

**மா. சோ. விக்டர்,**

தமிழறிஞர்.

# தனித்தமிழ் இயக்கம் வெளியிட்ட நுட்பவியல் கலைச் சொற்கள்.

| | |
|---|---|
| WhatsApp | புலனம் |
| Facebook | முகநூல் |
| Youtube | வலையொளி |
| Instagram | படவரி |
| WeChat | அளாவி |
| Messanger | பற்றியம் |
| Twitter | கீச்சகம் |
| Telegram | தொலைவரி |
| Skype | காயலை |
| Bluetooth | ஊடலை |
| WiFi | அருகலை |
| Hotspot | பகிரலை |
| Broadband | ஆலலை |
| Online | இயங்கலை |
| Offline | முடக்கலை |
| Thumbdrive | விரலி |
| Hard disk | வன்தட்டு |
| Battery | மின்கலம் |
| GPS | தடங்காட்டி |
| CCTV | மறைகாணி |

| | |
|---|---|
| OCR | எழுத்துணரி |
| LED | ஒளிர்விமுனை |
| 3D | முத்திரட்சி |
| 2D | இருதிரட்சி |
| Projector | ஒளிவீச்சி |
| Printer | அச்சுப் பொறி |
| Scanner | வருடி |
| Smartphone | திறன் பேசி |
| Sim Card | செறி வட்டை |
| Charger | மின்னூக்கி |
| Digital | எண்மின் |
| Cyber | மின்வெளி |
| Router | திசைவி |
| Selfie | தம்படம் |
| Thumbnail | சிறுபடம் |
| Meme | போன்மி |
| Print Screen | திரைப்பிடிப்பு |
| Inkjet | மைவீச்சு |
| Laser | சீரொளி |



### தமிழராய் தன்னைக் காட்டிக் கொள்ளும் எச்.ராஜா எங்கிருந்து வந்தவர்? தெரிந்து கொள்வோம்.

பேராசிரியர் ஹரிஹர சர்மா என்பவர் வட நாட்டிலிருந்து தமிழகத்திற்கு பிழைக்க வந்தார். அவரது மகன் இந்த ஹ. ராஜா சர்மா. இப்போது தமிழ்நாட்டில் பி.ஜே.பி யின் முக்கியத் தலைவர்களில் ஒருவராக இருக்கிறார். இஸ்லாமியர்களையும் கிறித்தவர்களையும் தவாறகப் பேசிக் கொண்டிருப்பவர். இந்திய ஒற்றுமைக்கு எதிரான கருத்துக்களைப் பேசுவது இவரது வாடிக்கையாகும். இவர் தமிழரே இல்லை என்பதை தமிழர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.



# சத்துமாவு




தயாரிப்புக்கு தேவையானவைகள்:
பொட்டுக்கடலை 1 கிலோ
கேழ்வரகு 2 கிலோ
சோளம் 2 கிலோ
மக்காச்சோளம் 2 கிலோ
கம்பு 2 கிலோ
பாசிப்பயறு அரைக்கிலோ
கொள்ளு அரைக்கிலோ
சோயா 1 கிலோ
தினை அரைக்கிலோ
கருப்பு உளுந்து அரைக்கிலோ
சம்பா கோதுமை அரைக்கிலோ
பார்லி அரைக்கிலோ
நிலக்கடலை அரைக்கிலோ
அவல் அரைக்கிலோ
ஜவ்வசரிசி அரைக்கிலோ
வெள்ளை எள் 100 கிராம்
கசகசா 50 கிராம்
ஏலம் 50 கிராம்
முந்திரி 50 கிராம்
சாரப்பருப்பு 50 கிராம்
பாதாம் பருப்பு 50 கிராம்
ஓமம் 50 கிராம்





சுக்கு 50 கிராம்
பிஸ்தா பருப்பு 50 கிராம்
ஜாதிக்காய் 2
மாசிக்காய் 2

**செயல்முறை :**

சோளம், கம்பு, பாசிப்பயறு, கேழ்வரகு, கொள்ளு ஆகியவற்றை தண்ணீரில் 12 மணி நேரம் ஊற வைக்க வேண்டும். தண்ணீரை நன்றாக வடித்த பின்னர், அதை ஒரு துணியில் கட்டி 12 மணி நேரம் கழித்து எடுத்தால், தானியங்கள் முளைவிட்டு இருக்கும். அவற்றை 3 நாட்கள் வெயிலில் காய வைக்க வேண்டும். மற்ற பொருட்களை ஒரு நாள் வெயிலில் காய வைக்க வேண்டும். அனைத்தையும் மொத்தமாக மாவு மில்லில் அரைத்து, 4 மணி நேரம் ஆற வைத்தால் சத்துமாவு தயாராகிவிடும். இந்தப் பொருட்களைச் சேர்த்து கிடைக்கும் மாவின் மொத்த அளவு 12 கிலோவாக இருக்கும்.

சத்துமாவு தயாரிக்கத் தேவையான பொருட்கள் மளிகைக் கடைகளில் கிடைக்கின்றன. தயாரிப்பதற்கு தனியான இடம் தேவையில்லை. வீட்டிலேயே தானியங்களை ஊற வைத்து, முளை கட்டலாம். வீட்டு வளாகத்தில் காய வைக்கலாம். தானியங்களை வீட்டு மிக்சியில் அரைத்தால் சரியாக வராது. ஆகவே மாவு அரவை இயந்திரத்தில் கொடுத்துதான் அரைக்க வேண்டும். ஒரு நபருக்கு ஒரு குவளை தண்ணீர் வீதம் கொதிக்க வைக்க வேண்டும். ஒருவருக்கு 2 மேசைக்கரண்டி மாவு வீதம் தண்ணீரில் கலந்து 2 நிமிடம் கொதிக்க வைத்தால் சத்து மாவு கூழ் தயாராகிவிடும். அவரவர் விருப்பப்படி இனிப்பு, உப்பு, மிளகுப்பொடி சேர்த்துப் பருகலாம். எதுவும் கலக்காமல் அப்படியே கூட குடிக்கலாம். காலையில் 2 குவளை சத்துமாவு பானம் குடித்தால் காலைச் சாப்பாடு பூர்த்தியாகிவிடும்.

**சத்துமாவு தரும் பயன்கள் :**

உடலுக்குத் தேவையான அனைத்துச் சத்துகளும் கிடைக்கின்றன. உடலுக்கு சக்தி கிடைக்கிறது. கார்போஹைட்ரேட், கொழுப்பு கறைவாக இருப்பதால் உடல் பெருக்காது. உடல் எடையைக் குறைக்க உதவுகிறது. குழந்தைகளுக்கு ஏற்ற உணவு, காலை, மாலை வேளைகளில் குழந்தைகளுக்குக் கொடுக்கலாம். முதியோர்கள் இதை அருந்தும் போது உடனடி சக்தி கிடைப்பதை உணர முடியும். எளிதில் செரிமானம் ஆகக்கூடியது.


**குறிப்பு :**

சத்துமாவு காயவைத்து, வறுத்து அரைக்கப்படுவதால் 6 மாத காலம் வரை கெடாமல் இருக்கும். பொதுவாக ஒரு நபர் ஒரு நாளைக்கு 50 கிராம் வரை பயன்படுத்தினால் ஒரு கிலோ பாக்கெட் 20 நாளில் தீர்ந்து விடும். இதனால் கெட்டு விடுமோ என்ற கவலையும் தேவையில்லை.

## சிறுதானிய தோசை

**செய்முறை:**

கம்பு, கேழ்வரகு, சோளம், கொள்ளு, பாசிப் பயறு, குதிரைவாலி, சாமை அரிசி, வரகரிசி ஆகியவற்றை தலா கால் கிலோ எடுத்துக் கொள்ளவும். இதனுடன், தோலுடன்கூடிய முழு கறுப்பு உளுத்தம்பருப்பு, கொண்டைக்கடலை தலா 4 தேக்கரண்டி அளவுக்குச் சேர்க்கவும். இவற்றை காலை முதல் மாலை வரை தண்ணீரில் ஊற வைக்கவும். நன்றாக ஊறியதும், தண்ணீரை வடித்து, இரவு, ஒரு வெள்ளைத் துணியில் கட்டிவைக்கவும். காலையில் முளை கட்டி இருக்கும். இதனுடன், நறுக்கிய வெங்காயம், இஞ்சி, பூண்டு, உப்பு சேர்த்து அரைத்துக்கொள்ளவும். தோசைக்கல்லில் எண்ணெய் விட்டு அடையாகத் தட்டி, அதன் மேல் முருங்கைக் கீரையைத் தூவி, இருபுறமும் சுட்டு எடுத்தால், சுவையான அடை தயார்!



**பலன்கள்:**

கேழ்வரகும், கம்பும் ரத்தத்தில் உள்ள இரத்தக் கொழுப்பைக் (கொலஸ்ட்ராலை) கட்டுப்படுத்த உதவுகின்றன. குதிரைவாலி, இதய நோய் உள்ளவர்களுக்கு நல்ல உணவு. கேழ்வரகில் நார்ச்சத்து அதிகம் இருப்பதால், வெல்லம் / கருப்பட்டி யின் அளவைக் கட்டுப்படுத்துகிறது. சாமை, முதுகெலும்பு வலியைக் குறைக்கும். வரகு, உடல் பருமன், மன அழுத்தத்தைக் குறைக்க உதவும்.


## தெரிந்து கொள்வோம்!

# ஹைட்ரோ கார்பன்

ஹைட்ரோ கார்பன் என்ற வார்த்தை நம்மில் பலருக்கு புதியதாக இருக்கலாம். ஆனால் அன்றாட வாழ்வில் நாம் தொடர்ந்து பயன்படுத்தி வரும் பெட்ரோல், டீசல், நிலக்கரி, திரவ எரிவாயு (LPG) மற்றும் மீத்தேன் ஆகிய அனைத்தும் ஹைட்ரோ கார்பன்தான்.

எளிமையான முறையில் சொல்வதானால், ஒரு பாட்டிலில் சிறிதளவு நீரையும் எண்ணெயும் எடுத்துக்கொண்டு அதனை ஒரு மூடியால் மூட வேண்டும். சிறிது நேரத்தில் தண்ணீர் பாட்டிலின் அடிப்பகுதியிலும் அதற்கு மேல் எண்ணெயும் மீதமுள்ள இடைவெளியில் வாயுவும்(காற்று) இருக்கும். பாட்டிலை தலைகீழாக கவிழ்த்தாலும் இதேபோன்று மறுபடியும் கீழே தண்ணீர் எண்ணெய் காற்று என்ற வரிசையிலேயே இருக்கும்.

இதற்கு காரணம் அடர்த்தி அதிகமுள்ள தண்ணீர் புவியீர்ப்பு விசைக்கு உட்பட்டு கீழ் நோக்கி செல்கிறது. இதுபோலதான் பூமிக்கு அடியிலும் நிகழ்கிறது. இன்னும் இது குறித்து புரிந்துகொள்ள வேண்டுமென்றால் ஒரு பஞ்சை எடுத்துக் கொண்டால் அதில் பல நுண்ணிய துளைகள் இருக்கும். அதனை நீரில் முக்கி எடுத்தால் அதன் துளைகளினூடே தண்ணீர் அதனுள் புகும். அந்த பஞ்சு மீது அழுத்தம் கொடுக்கும்போது தண்ணீர் வெளியேறும்.



இதேபோலதான் பூமிக்கு அடியிலும் பல விதமான பாறைகள் உள்ளன கருங்கல்லால் ஆன பாறைகளுக்குள் தண்ணீர் புகுவது கடினம். ஆனால் மணற்பாறைகளினுள் எளிதாக தண்ணீர் புகுந்துவிடும். இந்த மணற்பாறைகள் 'நீர் உறிஞ்சும் பாறைகள்' எனப்படும். இந்த நீர் உறிஞ்சும் பாறைகளுக்கு மேல் கருங்கல் பாறைகள் அமைந்துள்ளன.

எனவே கருங்கல் பாறைகள் பாட்டிலில் உள்ள மூடிபோல செயல்பட்டு மணற்பாறைகளிலிருந்து வெளியேறும் திரவங்களான பெட்ரோல், டீசல், மீத்தேன்

போன்ற ஹைட்ரோகார்பன்கள் வெளியேறாமல் தடுக்கிறது.

இந்த வளங்களை வெளியே எடுக்க வேண்டுமானால் கருங்கல் பாறைகளுக்குள் ஆழ்துளைகளை இட்டு கீழே உள்ள வளங்களை வெளியே எடுக்க முடியும். சரி இந்த வளங்கள் நிலத்திற்கு அடியில் எங்குள்ளது என்பதை எப்படி கண்டுபிடிக்க முடியும்?

அனைவருக்கும் தெரிந்த ஒரு உதாரணத்தை பார்க்கலாம், குழந்தை கருவில் இருக்கும்போது அதன் நிலையை தெரிந்துகொள்ள 'அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன்' எனப்படும் முறையில் வயிற்றின் மேல் வைக்கப்படும் கருவியின் மூலம் உள்ளே இருக்கும் குழந்தையின் நிலை அறியப்படுகிறது. இது எப்படி சாத்தியம்? கருவியிலிருந்து வெளிப்படும் ஒளி அதிர்வலைகள் வயிற்றுப் பகுதியிலிருக்கும் தோல் சதைகளினூடே சென்று பின்னர் எதிரொலிக் கப்படுகிறது. இதன்மூலம் குழந்தையின் பிம்பம் தெரிகிறது.

இதேபோல் உள்ள மற்றொரு தொழில் நுட்பம்தான் 'சீஸ்மிக் எதிரொலிப்பு'. இதன்மூலம் பூமிக்கடியில் சுமார் 10 முதல் 15 கிலோ மீட்டர் வரை சீஸ்மிக் அலைகள் சென்று எதிரொலிக்கப் படுகிறது. இதன்மூலமாகவே ஹைட்ரோகார்பன் இருக்கும் இடங்கள் கண்டறியப்படுகிறது.

### ஹைட்ரோகார்பன் என்றால் என்ன?

ஹைட்ரோகார்பன் என்பது ஹைட்ரஜனும் ஆக்ஸிஜனும் சேர்ந்த ஒரு கனிம கலவையாகும். இந்த ஹைட்ரோகார்பன்களில் ஆல்கேன் (alkanes), ஆல்கீன் (alkenes), ஆல்கைன் (alkenes), சைக்ளோ ஆல்கைன் (cycloalkanes) என 14 வகைகள் உள்ளன. சுருக்கமாக சொல்வதென்றால் மீத்தேன் வகை வாயுக்களின் பொதுப் பெயரே ஹைட்ரோ கார்பன் என்று அழைக்கப்படுகிறது.

மேலே குறிப்பிட்ட வற்றில் ஆல்கேன் என்பது ஒற்றை பிணைப்பு வகையாகும். இதன் சூத்திரம் $C_nH_{2n+2}$. நாம் குறிப்பிடும் மீத்தேன் இவ்வகையை சார்ந்தது தான். இதன் கெமிக்கல் பார்முலா $CH_4$ ஆகும். இது குரூட் ஆயில், இயற்கை எரிவாயு மற்றும் சாண எரிவாயுவில் காணப்படும். இதற்கு சதுப்பு நில வாயு என்ற பெயரும் உண்டு. எரியும் பொழுது மீதமின்றி முழுதாக எரிந்துவிடும் தன்மையும் இதற்குண்டு. இரவு நேரங்களில் சதுப்பு நிலப்பகுதிகளில் இந்த வாயு வெளிப்படுவது பார்ப்பதற்கு 'திடீர்' என்று ஒரு தீப்பந்தம் எரிவது போல் இருப்பதனால் இதனைக் 'கொள்ளிவாய்ப் பிசாசு' என்று அழைப்பது உண்டு.

### எப்படி உருவாகிறது மீத்தேன்?

இது மீத்தேனின் வேதியியல் அமைப்பு. இது விஷத்தன்மை பொருந்தியதாகும். இலை, மரங்கள், உயிரின உடல்கள் மட்கி பாக்டீரியாவினால் அழிக்கப்பட்டு கார்பனாக மாறி, காற்று மாசி லுள்ள ஹைட்ரஜனுடன் சேர்ந்து மீத்தேனாக மாறு கிறது. பூமிக்குள் இருக்கும் இந்த மீத்தேன் வாயு வானது தொடர்ச்சியாக நகரும் பண்புள்ளது, இவ்வாறு நகரும் மீத்தேன் இறுதியில் பூமிக்கு அடி யில் உள்ள படிவுப்பாறைகளில் தங்கிவிடு கிறது.

இந்தியாவில் இது போன்ற வாயு படிவுப் பறைகள் கங்கை சமவெளியில் மிகுந்து காணப் படுகிறது. பூமியில் துளையிட்டு இந்த வாயுவை எடுத்த பின் அங்கு உருவாகும் வெற்றிடத்தில் அதனை சுற்றியுள்ள பகுதியிலிருந்து பாறைகள் எலாஸ்டிக் போல் வந்து நிரப்பிக் கொள்ளும், அத்துடன் அருகிலுள்ள நிலத்தடி நீரும் அங்கு நிரப்பிக் கொள்ளும். இவை போதாதென்று பூமியின் மேற்பரப்பிலுள்ள நீரும் சிறிதளவு கீழே செல்ல வாய்ப்பு மிக அதிகம்.

### தற்போதைய ஹைட்ரோ கார்பன் திட்டம்

புதுக்கோட்டை மாவட்டம் வடகாடு அருகே நெடுவாசல் உள்ளிட்ட 13 இடங்களில் ஹைட்ரோ கார்பன் எடுப்பதற்கான திட்ட ஆய்வுக்கு மத்திய அமைச்சரவை கடந்த 15ஆம் தேதி ஒப்புதல் அளித்துள்ளது. கர்நாடக மாநிலத்தில் ஒரு தனியார் நிறுவனத்திற்குத்தான் மத்திய அரசு ஹைட்ரோ கார்பன் எடுக்க 15 ஆண்டுகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் அனுமதி வழங்கியுள்ளது.

ஹைட்ரோ கார்பன் திட்டம் என்பது நாம் முன்னரே பார்த்த, ஹைட்ரோ கார்பன் என்ற பொதுப்பெயரில் அழைக்கப்படும் மீத்தேன் வகை வாயுக்களான மீதேன், ஈதேன், ப்ரோபேன், பியூட் டேன் எனும் அனைத்து வாயுக்களின் கலவையை பூமியில் துளையிட்டு எடுப்பதுதான். இவற்றை ஷேல் காஸ், டைட் காஸ் என்று பிரிக்கலாம் எனவும் நிபுணர்கள் கூறுகின்றனர்.

### திட்டத்திற்கு எதிர்ப்பு ஏன்?

நிலத்தில் இருந்து இயற்கை எரிவாயுவை எடுப்பது சுற்றுச்சூழலுக்கும் ஆபத்தை ஏற்படுத்தும். இதன் காரணமாக நிலத்தடி நீர் வளம் குறையும் . எரிவாயுவை எடுப்பதற்கு செங்குத்தாகவும், படுக்கை வசமாகவும் பூமியில் 1000, 5000 மீட்டர் துளைகள் அமைக்கப்பட்டு நிலத்தடி நீர் வெளியே உறிஞ்சப் படும் .

இதுபோன்ற திட்டங்கள் பொதுவாக கடலை ஒட்டியுள்ள பகுதிகளில் செயல்படுத்தப்படும். அம்மாதிரி செயல்படுத்தப்படும் போது, நிலத்தடியில் உள்ள நீர்வளம் குறையும் என்ற பிரச்சனை எழுவ தில்லை. ஆனால் தற்போது விவசாயப் பகுதியில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுவதுதான் மக்கள் எதிர்ப்புக்கான முக்கிய காரணமாகும்.

காவிரி நீர், கானல் நீராகிப் போன நிலையில், டெல்டா மாவட்டங்களின் கடைமடை பகுதியான புதுக்கோட்டை மாவட்டத்தில் கிணற்று பாச னத்தை நம்பியே விவசாயம் நடைபெற்று வருகிறது. ஹைட்ரோ கார்பன் திட்டத்தால் நிலத்தடி நீர் வளம் முற்றிலும் அழிந்து விவசாயம் முற்றிலும் வீணாகும் என்று விவசாயிகள் கூறுகின்றனர். மேலும் இதனால் விவசாயிகளின் வாழ்வாதாரம் முற்றிலும் அழிந்து போகும் என்கிறார்கள் பலர்.

நெடுவாசலைத் தொடர்ந்து காரைக்காலிலும் ஹைட்ரோ கார்பன் திட்டத்திற்கு மத்திய அரசு அனுமதி கொடுத்துள்ளது. ஹைட்ரோ கார்பன் செறிவுள்ள கங்கை சமவெளியை விட்டு தமிழகத் தில்தான் எடுக்க வேண்டுமென்ற கட்டாயமில்லை.

இதனால் தமிழகத்திற்கோ தமிழக மக்களுக்கோ என்ன பிரதி பலன் செய்ய போகிறோம் என்பதை மத்திய அரசு சொல்லவில்லை. குடியிருப்பு மற்றும் விவசாய பகுதிகளில் எரிவாயு எடுக்கக்கூடாது என்ற விதிகள் இல்லையென்றாலும், கடலோர, மக்கள் வாழாத இடங்களில் இம்முயற்சியை செய்யலாம், மாற்று வழியாக இதே மீத்தேனை சாண எரிவாயு மூலம் எடுப்பதை ஊக்குவிக்கலாம்.

தமிழகத்திற்கு பெரிதும் உதவக் கூடிய எய்ம்ஸ் மருத்துவ கல்லூரி அமைப்பது போன்ற விசயங்களில் மெத்தனம் காட்டி விட்டு, மக்கள் விருப்பமில்லாத இதுபோன்ற திட்டங்களை அமல்படுத்துவதுதன் மூலம் ஆட்சியாளர்கள் மீது மக்கள் வெறுப்பை சம்பாதிப்பதே மிச்சம்.

## ஹைட்ரோகார்பனால் ஏற்படும் விளை வுகள்

நிலத்தில் 6000 அடிக்கு கீழ் போர்வெல் மூலம் நிலக்கரி அடுக்குகளுக்கு அடியில் சென்று ஹைட்ரோகார்பன் எடுக்கப்படுகிறது. விவசாய நிலங்கள் இந்த ரசாயனத்தால் அடியோடு பாதிக்கும். வறட்சி தலைவிரித்தாடும். விவசாய நிலங்கள் பாலைவனமாக மாறிவிடும்.

பூமிக்கடியில் உள்ள நிலத்தடிநீர் முழுவதும் வெளியேற்றப்படும். விவசாயத்திற்கு ஒரு சொட்டு நீர் கூட கிடைக்காது. உணவுப் பொருள் உற்பத்தி என்பது கேள்விக்குறியாகும். செடிகொடிகள், மரம் அழிந்துபோகும். நோய்களால், வறட்சியால் கால்நடை இனமே மறைந்துவிடும்.

ஹைட்ரோகார்பன் நச்சுப்பொருட்களாக பென்சீன், பெட்ரோலியம் போன்ற சுவாசிப்ப தானால் பல்வேறு நோய்கள் பரவும். அதிக பட்சமாக புற்று நோய் பரவ வாய்ப்புகள் அதிகம்.

ரசாயன பாதிப்புகளால் படிப்படியாக உடலில் பாதிப்புகள் ஏற்பட்டு கடைசியில்ல் சிறுநீரகங்கள், மூளை நரம்பு மண்டலங்கள் பாதிக்கப்படும்.

நெல், வாழை, பலா, மிளகுகரும்பு, தென்னை உள்ளிட்ட பல்வேறு விவசாயங்கள் செழிப்பாக நடந்தேறிய சூழலில் எதிர்காலத்தில் கற்பனையாகி விடும். காவிரி டெல்டா மாவட்டங்களை" நெற் களஞ்சியம்" என்று அழைக்கிறோம்! அந்த பெருமை இது போன்ற செயல்பாடு தொடர்ந்தால் மறைந்தே போகும்.

இந்த ஹைட்ரோ கார்பன் எரிவாயு எடுப்பதால் தமிழக மக்களுக்கு என்ன பயன்? பயன் ஒன்று மில்லை. தமிழக வேளாண்மையை அழிக்க வேண்டும் என்பதே முதன்மையான வேலைத் திட்டம் அதன் விளைவாகத்தான், ஆற்றுநீர் உரிமை யெல்லாம் கிடைப்பில் போட்டது.

தமிழர்கள் தற்சார்பாக வாழாமல் வெளிநாட்டு உற்பத்தியை நம்பி வாழவேண்டும். இறுதிக்கும் இறுதியாக தமிழர் என்ற அடையாளம் இன்றி அழிய வேண்டும். இதுதான் இந்திய அரசு வெளிநாட்டு கம்பெனிகளிடம் போட்டுக் கொண்டு ரகசிய ஒப்பந்தம் என்பதை சந்தேகிக்கின்றோம்!

**கவிபாஸ்கர்**

**நன்றி : முக்குலத்தோர் முகவரி**

இலங்கை தொடர்பான ஐ.நா மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை ஜெனிவாவில் 3.3.2017 அன்று வெளியானது

2015ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளதா என்பது பற்றி விளக்கும் வகையில் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

17 பக்கங்களைக் கொண்ட அந்த அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு :

இலங்கையின் மனித உரிமைகள் நிலைமைகளை கண்காணிக்கவும், ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் மற்றும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துவது மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதற்கும், ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்தின் முழு அளவிலான பணியகம் ஒன்றை அமைப்பதற்கு ஐ.நா மனித உரிமை ஆணையாளர் பரிந்துரைத்துள்ளார்.

இந்தப் பணியகத்தை அமைப்பதற்கு ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்துக்கு இலங்கை அரசாங்கம் அழைப்பு விடுக்க வேண்டும்.

இலங்கை இராணுவம் ஆக்கிரமித்துள்ள அனைத்து தனியார் நிலங்களையும் முன்னுரிமை அடிப்படையில், மீளக் கையளிக்க வேண்டும்.

வர்த்தக மற்றும் பொதுமக்கள் விவகாரங்களில் இராணுவத்தின் தலையீடுகள் முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும்.

நல்லிணக்கப் பொறிமுறைக்கான கலந்தாய்வு செயலணியின் பரிந்துரைகளைத் தழுவி, ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 30/1 தீர்மானத்தில் அளிக்கப்பட்ட வாக்குறுதிக்கு அமைய, நிலைமாறு கால நீதி தொடர்பாக கடப்பாடுகளை கால வரம்புடன் நிறைவேற்றுவதற்காக விரிவான ஒரு மூலோபாயத்தை வகுக்க வேண்டும்.

# இலங்கை தொடர்பான ஐ.நா மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை



அதில் ஐ.நா மனித உரிமை ஆணையாளர் பேரவைக்குச் சமர்ப்பித்துள்ள முன்னைய அறிக்கைகள் மற்றும் தற்போதைய அறிக்கையின் பரிந்துரைகள் உள்ளடக்கப்பட வேண்டும்.

இந்த மூலோபாயத்தின் ஒரு பகுதியாக அல்லது தனியாக ஐநா மனித உரிமைகள் பொறிமுறைகளின் முக்கியமான பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் தெளிவான திட்டம் ஒன்று தயாரிக்க வேண்டும்.

நிலைமாறு கால நீதிப் பொறிமுறைகளை வடிவமைக்கும் செயல்முறை, விசயத்தில் பொதுமக்கள், பாதிக்கப்பட்டவர்களின் குழுக்கள், சிவில் சமூக அமைப்புகள் மற்றும் ஏனைய பங்காளர்களுடன் தொடர்ந்தும் இணைந்து செயல்பட வேண்டும்.

உண்மை, நீதி, இழப்பீடுகள் மற்றும் மீள நிகழாமையை உறுதிப்படுத்தும், சிறப்பு அறிக்கையாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டு, இந்தச் செயல்முறையில் அவருடன் தொடர்ந்து இணைந்து செயல்பட வேண்டும்.

சம்பந்தப்பட்ட சட்டவரைவுகளுக்கான ஆலோசனை பெறுவதற்கு சம்பந்தப்பட்ட, ஐ.நா பொதுச்செயலரின் சிறப்பு பிரதிநிதிகளை இலங்கைக்கு அழைக்க வேண்டும்.

சித்திரவதை, பாலியல் வன்முறைகள், ஏனைய மனித உரிமை மீறல்கள் தடை செய்யப்பட்டுள்ளன, அவை குறித்து விசாரிக்கப்பட்டு தண்டனை விதிக்கப்படும்,

மனித உரிமை பாதுகாப்பாளர்கள், பாதிக்கப்பட்டவர்கள், மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் மீதான எல்லா வகையான கண்காணிப்பு மற்றும் துன்புறுத்தல்களையும், பாதுகாப்புப்படைகள் உடனடியாக நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று இராணுவம், புலனாய்வுப் பிரிவு, காவல்துறைக்கு தெளிவான உத்தரவுகள் பகிரங்கமாக விடுக்கப்பட வேண்டும்.

## ஐ.நா.அதிகாரிகளை கொண்ட குழுவினர் 6 தடவைகள் இலங்கை வருவர்

ஐ.நா.அதிகாரிகளை கொண்ட குழுவினர் 6 தடவைகள் இலங்கை வருவர் : பிரேரணை அமுலாக்க விடயங்கள் மதிப்பீடு செய்யப்படும்

இலங்கை தொடர்பாக ஜெனிவா மனித உரிமைப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட பிரேரணையின் பிர காரம் ஐக்கிய நாடுகள் மனித உரிமை அலுவலகத்தின் அதிகாரிகளைக் கொண்ட குழுவினர் ஆறு தடவைகள் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளனர்.

மேலும் இந்த புதிய பிரேரணையை அமுலாக்கம் செய்வதற்காக 362000 டொலர்கள் தேவைப்படுவதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமை செயலகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை செயலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

இலங்கை தொடர்பாக ஜெனிவா மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட பிரேரணையின் பிரகாரம் அந்தப் பிரேரணையை நிறைவேற்றுவதற்காக 362000 டொலர்கள் தேவைப்படுகின்றன.

மேலும் இலங்கை எவ்வாறு 2015 ஆம் ஆண்டு பிரேரணையை என்பதனை மதிப்பீடு செய்வதற்காக ஐக்கிய நாடுகள் மனித உரிமை அலுவலகத்தின் அதிகாரிகளைக் கொண்ட குழுவினர் ஆறு தடவைகள் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளனர். 14 நாட்களில் இந்த விஜயங்கள் அமையவுள்ளன.

கடந்த 23.3.2017 வியாழக்கிழமை இலங்கை தொடர்பான பிரேரணை வாக்கெடுப்பின்றி ஐககிய நாடுகள் மனித உரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# தாமிரபரணி ஆற்று நீரை உறுஞ்சும் பெப்சி, கோக கோலா நிறுவனங்களை தடைசெய்யவேண்டும்

தாமிரபரணி ஆற்றில் பெப்சி, கோக கோலா குளிர்பானங்கள் தயாரிப்பதற்காக தண்ணீர் எடுப்பதற்கு விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான பொதுநலன் மனுக்களை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

திருநெல்வேலி மாவட்டம், கங்கைகொண்டான் தொழிற்பேட்டையில் பெப்சி, கோக கோலா குளிர்பானங்கள் தயாரிக்கும் ஆலைகள் செயல்படுகின்றன. இந்த ஆலைகளுக்கு குளிர்பானம் தயாரிக்க தாமிரபரணி ஆற்றில் இருந்து தண்ணீர் எடுக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தாமிரபரணியில் இருந்து நெல்லை மாவட்ட மக்களின் குடிநீர் தேவைக்காக 12.5 கோடி லிட்டர் தண்ணீர் தினமும் எடுக்கப் படுகிறது. இது தவிர தூத்துக்குடி, ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களின் குடிநீர் தேவைக்காக 10 கோடி லிட்டர் தண்ணீர் எடுக்கப்படுகிறது. தாமிரபரணியில் இருந்து குளிர்பானம் தயாரிக்க தண்ணீர் எடுக்க அனுமதி வழங்கப் பட்டுள்ளது. இதற்கு ஆயிரம் லிட்டருக்கு ரூ.37.50 மட்டும் வசூலிக்கப்படுகிறது.

குளிர்பானம் தயாரிக்க தாமிரபரணியில் இருந்து அதிக அளவில் தண்ணீர் எடுப்பதால் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. தாமிரபரணியில் தற்போது போதிய அளவு தண்ணீர் இல்லை. எனவே குளிர்பான ஆலைகளுக்கு தாமிரபரணியில் இருந்து தண்ணீர் விநியோகிக்க தடை விதிக்க வேண்டும் என குறிப்பிடப் பட்டுள்ளது.

இந்த மனு கடந்த 2016 நவம்பர் மாதம் அப்போதைய அமர்வில் விசாரணைக்கு வந்தபோது, தாமிரபரணியில் இருந்து குளிர்பான ஆலைகளுக்கு தண்ணீர் வழங்க தடை விதித்து உத்தரவிட்டது.

இந்த தடையை விலக்கக் கோரி குளிர்பான நிறுவனங்கள் சார்பில் மனுக்கள் தாக்கல் செய்யப் பட்டன. அதில், "சிப்காட் தொழிற்பேட்டையில் பல தொழிற்சாலைகள் உள்ளன. அந்த தொழிற்சாலைகளுக்கு தாமிரபரணியில் இருந்து 5.75 மில்லியன் லிட்டர் தண்ணீர் எடுக்க அனுமதி வழங்கப் பட்டுள்ளது. இதில் 1.3 மில்லியன் லிட்டர் மட்டுமே குளிர்பான நிறுவனங்கள் பயன்படுத்துகின்றன. குளிர்பான நிறுவனங்கள் 0.2 சதவீதம் நீரை

மட்டுமே பயன்படுத்துகின்றன. இது மொத்த தண்ணீரில் 5ல் ஒரு பங்கு ஆகும். மீதமுள்ள 99.8 சதவீத தண்ணீரை பிற நிறுவனங்கள் பயன்படுத்து கின்றன. இருப்பினும் குளிர்பான நிறுவனங்களுக்கு எதிராக மட்டும் வழக்கு தொடர்ந் துள்ளனர்" என கூறப்பட்டிருந்தது.

இந்த வழக்கில் நீதிபதிகள் ஏ.செல்வம், பி.கலையரசன் ஆகியோர் அளித்த தீர்ப்பு:

இந்தியா சுதந்திரம் பெற்று 70 ஆண்டுகள் ஆகியும் பாசன வசதியை மேம்படுத்த தமிழக அரசு நடவடிக்கை எடுக்காமல் இருப்பது வருத்தம் தருகிறது. தாமிரபரணியை ஒட்டி 8 அணைகளும், 283 கி.மீ. தொலைவுக்கு 11 கால்வாய்களும் செல் கின்றன. இந்த பாசன அமைப்புகள் அனைத்தும் மன்னர்கள் ஆட்சி காலத்திலும், ஆங்கிலேயேர் ஆட்சி காலத்திலும் ஏற்படுத்தப்பட்டவை.

தாமிரபரணி ஆற்றில் இருந்து உபரி நீர் கடலில் கலப்பதை தடுத்து, உபரி நீர் முழுவதும் நீர்நிலை களுக்கு நேரடியாக செல்ல உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதுவும் வருத்தம் அளிக்கிறது.

இந்த வழக்கு தொடர்ந்த பிரபாகர், குளிர்பானம் நிறுவனத்தில் 3 ஆண்டுகளாக வழக்கறிஞராகப் பணிபுரிந்துள்ளார். அவர் நியாயமாக நடந்து கொள்ளாததால் பணியில் இருந்து விடுவிக்கப் பட்டார். இதனால் குளிர்பான நிறுவனத்துக்கு எதிராக செயல்படுகிறார்.

குளிர்பான நிறுவனத்துக்கும், தனக்கும் இடையி லான தனிப்பட்ட பிரச்சினையை தீர்க்க பொது நலன் மனு தாக்கல் செய்துள்ளார் என குளிர்பானம் நிறுவனம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தனிப் பட்ட நலன்களுக்காக பொதுநலன் வழக்கு தொடர் வதை ஏற்க முடியாது. எனவே 2 மனுக்களும் தள்ளு படி செய்யப்படுகின்றன என நீதிபதிகள் உத்தரவில் கூறியுள்ளனர்.

இதையடுத்து தாமிரபரணியில் இருந்து குளிர்பான நிறு வனங்கள் தண்ணீர் எடுப்பதற்கான தடை நீங்கியுள்ளது.

தாமிரபரணி ஆற்று நீரை உறிஞ்சி, பல்லாயிரக் கணக்கான கோடி ரூபாய்க்கு பொதுமக்களிடமே விற்பனை செய்யும் கோக கோலா, பெப்சி போன்ற நிறுவனங்களை தடை செய்ய வேண்டும்.

சிப்காட் வளாகத்தில் உள்ள 36 ஏக்கர் நிலத்தின் விலை அரசு மதிப்பில் ரூ. 5.40 கோடி, சந்தை மதிப்பில் ரூ. 15 கோடி. ஆனால், பெப்சி நிறுவனம் இந்த நிலத்துக்கு ஆண்டுக்கு ரூ. 36 குத்தகை செலுத்த வேண்டும். 100 ஆண்டுகளுக்கு சேர்த்து குத்தகைத் தொகை ரூ. 3,600 மட்டுமே.

தாமிரபரணி ஆற்றில் இருந்து தினமும் 15 லட்சம் லிட்டர் தண்ணீர் வழங்க பெப்சி நிறுவனம் ஒப்பந்தம் செய்துள்ளது. 1,000 லிட்டர் தண்ணீர் ரூ. 37க்கு அரசால் வழங்கப்படும்.

ஆலை நிர்வாகத்துக்கு அதிகப்படியான தண்ணீர் வழங்குவதால், குடிநீர் விநியோகம் பாதிக்கப்படும்.

தென்மாவட்ட மக்களின் குடிநீர் ஆதாரமாகவும் இருந்து வரும் தாமிரபரணி ஆற்றில் இருந்து எந்தெந்த நிறுவனங்கள் எவ்வளவு தண்ணீர் நாள் ஒன்றுக்கு எடுத்து வருகிறது என்பது குறித்து திருநெல்வேலியை சேர்ந்த ராமைய்யா ஆர்யா என்பவர் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் மூலம் கேட்டறிந்துள்ளார்.

இதன்படி கீழ்க்கண்ட ஐந்து நிறுவனங்கள் எடுத்து வரும் தண்ணீரின் அளவு குறித்து தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் மூலம் தெரிய வந்துள்ளது.

1. ஏசிடி டயர்ஸ் நிறுவனம் நாளொன்றுக்கு 9.3 லட்சம் லிட்டர் தண்ணீர்

2. கோகோ கோலா நிறுவனம் நாளொன்றுக்கு 3 லட்சம் லிட்டர் தண்ணீர்

3. ராம்கோ இண்டஸ்டரீஸ் நிறுவனம் நாளொன்றுக்கு 1.2 லட்சம் லிட்டர் தண்ணீர்

4. பெப்சி நிறுவனம் நாளொன்றுக்கு 1.1லட்சம் லிட்டர் தண்ணீர்

5. நோவா கார்பரேசன் இந்தியா நிறுவனம் நாளொன்றுக்கு 95 ஆயிரம் லிட்டர் தண்ணீர்

இந்த நிலையில் ஜல்லிக்கட்டு, நெடுவாசல் போராட்டங்களை அடுத்து தாமிரபரணியில் இருந்து தொழிற்சாலைகள் தண்ணீர் எடுப்பதை தடை செய்ய வேண்டும் என்று மாணவர்கள், இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் போராட வீதிக்கு வரவேண்டும். ●


Owned, Published and Printed by **V. Thalapathi,** Published from No. 124 N.T.R Street, Rangarajapuram, Kodambakkam, Chennai - 24. and Printed at **DESIGNS PARK,** No. 22 weavers street triplicane, chennai-5, Editor: **V. THALAPATHI.**

# கவிபாஸ்கர்

புதிய
## நூல்கள் விற்பனைக்கு




**நூல்கள்**

**காற்றில் மிதந்து வருகிறார் கண்ணதாசன் (கட்டுரைகள்)**
பக்கம்: 176
விலை: ரூ. 150/-

**வணக்கம் தோழர் (கவிதைகள்)**
பக்கம்: 80
விலை: ரூ.65/-

**போர்த்தொழில் (பாவரங்கக் கவிதைகள்)**
பக்கம்: 112
விலை: ரூ 75/-

**கூட்டாஞ்சோறு (கவிதைகள்)**
பக்கம்: 120
விலை: ரூ. 100/-

**குறுந்தகடுகள்** (பாடல்கள்)

**பனைமரக்காற்று**
*(ஈழப்பாடல்கள்)*
விலை: ரூ60/-

**நெருப்பின் குரல்**
*(ஈகியர் பாடல்கள்)*
விலை:ரூ. 60/-

**உயிரெழுத்து**
*(குழந்தைப் பாடல்கள்)*
விலை: ரூ.60/-

நூல்கள் & குறுந்தகடுகள் மொத்த விலை ரூ. **575/—**

**25% கழிவில் மொத்தத் தொகுப்பு ரூ. 430/-**




புல்லாங்குழல் வெளியீடு

தொடர்புக்கு: 98416 04017 / 90471 62164 / 044 24742 911

MUTRAM - Tamil & English Monthly R.Dis No. 1678-2012
RNI No. TNBIL/2010/36924. REGISTERED TN / CC ( S ) DN / 496 / 14 - 16.
Date of Publication 7th of every month

